570

தமிழ் மறை

10-,6x
N47
111757

வட சென்னை

காமராஜ் தேசிய சங்கம்

தமிழ் மழை

2

பதிப்பாசிரியர்:

கி. முருகேசன்

ச. ந. பாலசுந்தரம் B.A.,

விலை நான்கணா

(வெளி நாடு) ஐந்தணா

தமிழ் மழைப் பதிப்பகம்

வடசென்னை காமராஜ் தேசிய சங்கம்

வண்ணையம்பதி :: சென்னை

உள்ளுரை

		பக்கம்
சுய நிர்ணயம்	—திரு. கி. முருகேசன்	1
காந்தியமும் மார்க்ஸியமும்	—திருவாளர் திரு. வி. க.	7
கம்பன் இராமனைப் பாடுவானேன்	—வித்துவான் திரு. வே. சு. சுப்பிரமணியாச்சாரியார் P.O.L.,	10
திருக்கோவில் நுழைவு	—வித்துவான் திரு. மறை. திருநாவுக்கரசு	17
மகளிர் புதுப்புனல் ஆடல்	—திருமதி V. B. பத்மாவதி	23
சந்தேகம்	—திரு. டி. எஸ். வேலன்	26
சுஜாதா	—திருமதி V. N. கௌதமி தேவி	31
சேரியில் தோன்றிய சீரிய பெண்	—திருமதி த. ச. ஆனந்த நாயகி	35
மதிபதி	—வித்துவான் ஒண். பிறைக்கண்ணியான் B.A.,	38
கண்டேன் மழையை!	—" ஒண் மணி "	41
உவமை ஓவியம்	—" சகி "	45
பஞ்சாங்கம் பழுதாயிற்றே!	திரு. ச. ந. பாலசுந்தரம் B.A.,	48

TAMIL NADU ARCHIVES LIBRARY ... MADRAS
No. H1757

"தமிழ் மழை"யில் வெளியாகும் கட்டுரைகள், கதைகளில் காணப்படும் பெயர்களெல்லாம் கற்பனைப் பெயர்கள். அவை யாரையும் குறிப்பிடுவனவல்ல.

Printed at the B, N, K Press, Madras, for Q. H. No. MS. 483/D,

சுய நிர்ணயம்

கி. முருகேசன்

" எப்பதம் வாய்ந்திடு மேனும்—நம்மில்
யாவர்க்கும் அந்தநிலை பொதுவாகும் "—பாரதியார்.

ஒரு தேச மக்களின் [1]இணக்கப்பான்மையும் பொது மொழியும், [2]பொது இயல்பும், [3]பொதுக்குடி முறையும் பொது நோக்கமும், பொதுவுணர்ச்சியும் அத்தேசிய சக்தியை வளர்க்கும். கல்வியும் வெளிப்பகைக்கு அச்சமும் தேசியத்தை பலப்படுத்தும் [4]தேசப்பற்றை யுணர்த்தும் குறி குணங்களே உலக நாகரிக வளர்ச்சியைக் காட்டும் சின்னங்களாம். இத் தேசியம் ஊர் நடுவில் வளரும் பழுமரத்தை ஒக்கும். இஃது ஒவ்வொரு மனத்திலும் வேரூன்றி, இனப்பற்று என்னும் உணவினாலே வளர்ந்து, சுய நிர்ணயம் என்னும் அடித்தண்டிலிருந்து நியாயம் என்னும் கிளைகளைப் போக்கி, தற்காப்பு என்னும் தழைகள் நிரம்பி, நேர்மை என்னும் நிழலிலே, புரட்சிக் கிரணங்களால் வெம்பாமல், சுதந்தரவுணர்ச்சி யென்னும் சாறு நிரம்பிய அரசியல் என்னும் கொழுங்கனியைத் தர வேண்டும். இக் கனியை உண்போரெல்லாம் அமைதி யின்பம் பெறுவரென்பது உண்மை. இக்கனி என்று கிடைக்குமோ? ஜூனுக்கு முன் பிரிட்டன் என்னும் சூறுவளி இம்மரத்தை முறித்துத் தள்ளாதபடி காந்தி யென்னும் காவல்காரன் இந்து முஸ்லிம் ஒற்றுமையென்னும் பலத்த வேலியை அமைத்துக் காக்கவேண்டும். இதற்குள் காங்கிரஸ் என்னும் கைத்தண்டினாலே சுயநலப் பறவைகள் அம் மரத்தில் தங்கிக் கூடுகட்டிக் குடியைக் கெடுக்காதபடித் தடுக்கவேண்டும்.

இப்பொழுது நம் தேசிய பலத்தைக் குறைக்கப் பல கிளர்ச்சிகள் நடக்கின்றன. பாகிஸ்தான் ஜிந்தாபாத்,

---

(1) Closeness of Contact (2) Common Culture
(3) Tradition (4) National Attributes.

தமிழ் நாடு தமிழருக்கே, தமிழருக்குச் சுய நிர்ணயம், சுதந்திர இந்தியாவில் சுதந்தரத் தனியரசு என்னும் சுழல் காற்றுகள் மக்கள் மனத்தை அலைக்கின்றன. இவை எதற்கு அறிகுறியோ! எகிப்தின் படையெடுப்புக்கு ஒப்போ! விலகும் பிரிட்டனைக் கைகொட்டி விளிக்கும் ஓசையோ! காங்கிரசின் சத்திய போதனை காதில் விழாத படிக் கூவும் பேரொலியோ! சற்று உற்றுக் கவனிப் போம்!

நம் தேசம் மலையரணால் சிறந்தது மலையிலிருந்து எதிரொலிப் பிறக்குமல்லவா! வடக்கே சுதந்திர பாகிஸ் தான், சுதந்திர இந்துஸ்தான் என்னும் வாயொலிகள் இமயமலையில் தாக்கி எதிர் ஒலியைத்தரும் அல்லவா! அவ் வெதிர்வொலிகள் கலந்துதான் தென்னாட்டில் "சுதந்திரத் தமிழரசு" என்று கேட்கப்படுகிறது என்னலாம் "தமிழ் நாடு தமிழருக்கே," "திராவிட நாடு திராவிடருக்கே" என்ற ஒலிகள் ஒரு பொருள் உணர்த்துவனவாகா. ஒரு பொருள் உடையனவே என்று சாதிப்பது "சிற்றப்பன் குதிரில் இல்லை" என்பதற்கு இனம். "தமிழருக்குச் சுய நிர்ணயம்" என்னும் ஒலி மேற்கூறிய இரண்டு ஆரவாரங் களின் எதிர் ஒலி என்று கொள்ளுதலில் தவறு யாது? "திராவிட நாடு திராவிடருக்கே," என்பவர்களும், "தமி ழருக்குச் சுய நிர்ணயம்" என்று கூறுபவர்களும் வேற் றுமையுற்று நிற்பதற்குக் காரணம் யாது? ஒருவரை யொருவர் புரிந்துக் கொள்ளாமையே யாகும். இவ்விரு கூட்டத்தாருக்கும் லட்சியம் ஒன்றே என்பது வெள் ளிடைமலை. இஃது "சுய நிர்ணயம்" என்ற தொடரின் பொருளை விசாரணை செய்தலால் விளங்கும்.

"சுய நிர்ணயம்" என்னும் சொற்றொடர் 1919-20-ம் ஆண்டில் அமைதி உடன்படக்கைகள் நேர்ந்த பொழுது தோன்றிற்று. வெர்செல்ஸ் ஒப்பந்தம் பெரும்பாலும் சுய நிர்ணயக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட தாகும். இவ்வொப்பந்தம் இனத்தை அடிப்படையாகக்

கொண்டு பிரிக்கப்பட்ட நாடே நாகரிக உலகின் சின்னம் என்று ஒப்புக்கொள்ளுகிறது. இதில் இனம் என்றது யாது? அதன் இலக்கணம் என்ன? என்ற கேள்விகளுக்கு விடையளிப்பது அவசியமாகின்றதன்றோ! இவ்வினங் களைப் பற்றியும், இவற்றை நிர்ணயிப்பது பற்றியும் பேரறிஞர்கள் ஒருமுகப்பட்ட அபிப்பிராயங்களை அளிக்க வில்லை. என்றாலும், அவர்கள் கூறிய கருத்துக்களைச் சுருக்கித் தந்து அடிப்படையான உண்மையை விளக்கிக் காட்டுதல் இன்றியமையாததாகிறது. அவ்வறிஞர்கள் உரைத்தவற்றுள் எல்லாம் "ஒரே மொழி, ஒரே சரித் திரம், ஒரே பொருளாதாரப் பிணைப்பு" என்பன பொது வாகக் காணப்படுகின்றன. இனத்தை நிர்ணயிப்பதற்கு அவை *மூல அளவைகள் ஆகா வென்பதை நோக்கு வோம்.

சுவித்ஸர்லாந்து மக்களிடையில் மூன்று மொழிகள் வழக்காற்றிலிருக்கின்றன. அவர்களை வெவ்வேறு இனத் தவராகக் கருத இடமுண்டா? அமெரிக்கரும் ஆங்கிலேய ரும் ஒரே மொழியைப் பயின்றாலும் ஒரே இனத்தைச சார்ந்தவராகக் கூற இயலுமா? இதனால் மொழி மூல அளவை யாகா தென்பதுவிளங்கிற்று.

கானடா மக்களுக்கும், அமெரிக்கா ஐக்கிய நாட்டா ருக்கும் பொருளாதார பிணை ஒன்றாயிருந்தாலும் வெவ் வேறு இனத்தவராக இருப்பதேன்?

ஜெர்மானியர், ஆங்கிலேயர், டச்சுக்காரர்கள், டேனிஷ்காரர்கள், ஸ்காண்டிநேவியர் என்னுமிவர்கள் டோனிக் என்னும் மூல குடும்ப வர்க்கத்தவராயிருப்பி னும் வெவ்வேறு இனத்தவராக ஒற்றுமைப்பற்று திருப்ப தேன்? இதனால் மேற்காட்டிய பொது மூல அளவைகளை இன இலக்கணங்களாகக் கருதி சுய நிர்ணயம் வழங்குதல் தக்கதன்று என்று தோன்றுகின்றதன்றோ! தக்க தென்று மேற்கொண்டால் பிரிட்டனும் ஸ்விட்சர்லாந்

* Criterion

தும் தனித்தனி மும்மூன்று கூறுகளாகும். பெல்ஜியம் வல்லூன், பிலிமிஷ் என்னும் இருதுண்டாகும். இவ்வாறு 28 ஐரோப்பிய நாடுகளும் 68 சிறு நாடுகளாகப் பிரிந்து நிற்கும். உலகின் பிறநாடுகளிலும் இந்நோய் பரந்து உலக அமைதியையும் முன்னேற்றத்தையும் கெடுக்கும் என்பதில் ஐயமில்லை. உயிர்நாடியான மூலக் கொள்கைகளைக் கைவிட்டு மேற்காட்டிய அளவைகளின் அடிப்படையால் பெற்ற சுய நிர்ணயத்தின் விளைவை நோக்குவோம்:

1914-19-ன் போருக்குப் பிறகு சுய நிர்ணய அடிப்படையில் தோற்றுவிக்கப்பட்ட பின்லந்து, எஸ்தோனியா, லாட்வியா, லிதுவேனியா, போலந்து, டான்விக், செகஸ்லோவேகியா முதலிய நாடுகள் சுதந்தரமாக வாழ்ந்தனவென்று சொல்லமுடியுமா? இந்நாடுகள் எவ்வளவு சிக்கிரம் தோன்றியனவோ அவ்வளவு சீக்கிரத்தில் தம் சுதந்தரத்தை இழந்து, வலிய நாடுகளைச் சார்ந்து வாழுங் கதியைப் பெற்றன என்பது உலக பிரசித்தமே. பாவம்! தற்பாதுகாப்புக்கும் தம் உரிமையைப் பலியிட வேண்டியதாயிற்று. ஏகாதிபத்தியப் பற்றுள்ள நாடுகள் அவற்றின் மிடற்றை நெரித்தன. இத்தகைய சுய நிர்ணயம் ஏகாதிபத்தியத்திற்கோர் வரப்பிரசாதமாய் உலகத்தைப் போர்க்களமாக்கிற்று. இதனால் சுய நிர்ணயம் உதவாதென்பது எமது கருத்தன்று. அதன் உயிர் நாடியான மூலக் கொள்கைகள் இதுவரையிலும் அநுசரிக்கப்படவில்லையே. அஃது என்று ஆக்கச் சக்தியாக பரிணமிக்குமோ என்று தான் யாம் வருந்துகிறோம். அதனை யொரு மழு (Double edged weapon) என்றுணர்ந்து சரியான முறையில் கையாளப்படாமையே எமக்கு வருத்தத்தை அளிக்கிறது. இனி சுய நிர்ணயத்தை எத்தகைய லட்சியத்தால் கையாளலாம். அந்த லட்சியத்திற்கு அடிப்படையான இன இலக்கணம் யாதென்று நீங்கள் கேட்கலாம். மொழி, சரித்திரம், பொருளாதார வாழ்வு என்னும் நீர்ச்சுழிகளைத் தப்பி, பொது நோக்கம், பொதுப் பயம், பொதுக்

குறை, பொது அடிமை (Common subjection) என்னும் மூலாங்கங்களை அடிப்படையாகக் கொண்டு சுயநிர்ணயம் வழங்கப்படவேண்டுமென்று விரும்புகிறோம். இதனால் மக்களிடையே பற்று மிகுந்த கட்டுப்பாடுற்ற பெரிய சுதந்தர நாடுகள் சிலவே தோன்றி உலக அமைதியை வளர்க்க வல்லனவாகுமென்பது நிச்சயம். இக்கருத்தை யொட்டி நோக்கினால் நமது தேசத்தில் இந்தியர் அனைவர்க்கும் பொதுவாக சுய நிர்ணயம் வேண்டும் என்பதல்லது "தமிழருக்குச் சுய நிர்ணயம்" என்பதில் அருத்தமிருக்கிறதா? நாம் எதற்காக சுதந்தரம் விரும்புகிறோம். பயமும், குறையும் அடிமையும் ஒழியவல்லவா. இவை இந்தியரனைவர்க்கும் பொதுவானவை அன்றோ! எந்த லக்ஷியத்தை முன்னிட்டு தேச சுதந்திரம் விரும்புகிறோம் என்பதை மறந்து தனித்தனி சுயநிர்ணயத்தை விரும்புதல் சரியா? பெற்றாலும் நிலைக்குமா? பொதுப் போராட்டத்திற்குத் தோள் தட்டி வராமல் கிளைப்போர்களை எழுப்புதல் நன்மை பயக்குமா? நேயர்களே யோசித்துக் கூறுங்கள். இந்தியாவிலுள்ள வகுப்புவாதிகளும், சுயநல பிற்போக்காளர்களும் எண்ணும் சதிச்செயல் பொது மக்கள் கண்ணுக்குப் புலப்படாதா! கைப்புண்ணுக்குக் கண்ணாடியும் வேண்டுமா? பல்லாயிரம் ஆண்டுகளாக பொதுச் சரித்திரம், பொது நோக்கம், பொதுக் குறை, சுதந்திர வேட்கை என்னும் இவற்றால் ஒரு சமூகச் சின்னங்களாய் விளங்கும் இந்து முஸ்லிம் தேசிய சகோதரர்களைப் பிரிக்க முயலும் சதி காங்கிரஸ் லட்சியத்திற்கே பிறவிப்பகை யென்பதை நாமறிய வேண்டும். இவ்வாறிருக்க திராவிடன், தமிழன் என்றுப் பிரித்துச் சுய நிர்ணயம் வேண்டுதல் என்ன அறியாமை! இந்திய சமூகத்தில் இவர்கள் சம்பந்தப்பட்டவராயிருந்தும், தனிச் சுய நிர்ணயம் கோரும் கொள்கையில் இவர்களுக்கு நல்லெண்ணமிருப்பதாகக் கருத இடமுண்டா!

சுய நிர்ணயத்தத்துவத்தின் மூலக் கொள்கைப்படி நமது தேசம் ஒரே நாடாகும். காங்கிரசும் காந்தியும்

இதை பலபடியாக விளக்கியிருக்கிறார்கள். ஆனால் பொதுச் சேவையில் மனம் பற்றாத சுயநலக் கூட்டத்தார் இத் தேசத்தைப் பல சிறு நாடுகளாகக் காண்கிறார்கள். காங்கிரஸ் சுதந்தர இந்தியாவை சுய நிர்ணய தத்துவத்தின் மூலக் கொள்கையைக் கொண்டு தனி நாடாகக் கருதும். எனினும் மக்களுக்குள்ள மொழி வளர்ச்சி முதலிய சிறு சிறு குறைகளை நீக்க அகில சுதந்திர இந்தியாவின் அங்கங்களாக மாகாணம் பிரிவு செய்யும். இச்செயல் திடமான வேலியமைத்த சொந்த வயலில் பாத்தி செய்து வெவ்வேறு பயிரை விளைத்துக் கண்காணித்துப் பயன் கொள்ளும் நல்ல உழவனது செயலை ஒக்கும்.

தமிழர்களே! பொதுக் குறை, பொதுப் பயம், பொது அடிமை என்னும் மூலக் கொள்கைகளை லட்சியமாகக் கொண்டு இந்தியரனைவர்க்கும் பொதுவாக சுய நிர்ணயம் வேண்டுமென்று எண்ணுங்கள்! பிற்காலத்தில் நிர்ணயிக்கப்படும் மாகாணங்களுக்குப் பிரிவு உரிமை உண்டென்றாலும் அதை வழக்காகக் கொண்டு சுயநலப் பிரசாரகர்களது வார்த்தையில் மயங்கித் தனிச் சுய நிர்ணயம் விரும்பாதீர்கள்! இத்துணைக் காலமாக இந்திய மக்கள் அனைவரது நன்மைக்கும் பொதுவாகப் போராடும் காங்கிரஸ் வருங்காலத்தில் தமிழருக்கோ, திராவிடருக்கோ ஏதேனும் இன்னல் செய்ய எண்ணுமா? அகில இந்தியா பொதுச் சேவை சக்திக்கு சுயநலக் கருத்துத் தோன்றுமா? தமிழன் வேறு, காங்கிரஸ் வேறு! அகில இந்திய ஜன சக்தியே காங்கிரஸ். அச்சக்தியில் தமிழர் ஒரு பாகம். வயிற்றைப் பார்த்துப் பொறாமைக் கொண்ட கை, கால், வாய் என்னும் உறுப்புக்களின், கதி யெப்படியாயிற்று! காங்கிரஸ் இந்தியாவின் வயிறு. தமிழன் முதலிய குழுக்கள் பிற உறுப்புக்களாகும். வயிறு வாழ பிற உறுப்புக்களும் வாழும். காங்கிரஸ் வாழ நாமும் உடனுகை வாழுவோம்.

காந்தியமும் மார்க்ஸியமும்

திருவாளர் திரு. வி. க.

சரித்திர உலகை நோக்கினல், அஹிம்சை பரம தருமம் என்று முதல் முதல் உலகில் அறிவுறுத்தியவர் விருஷபதேவர் என்று தெரிகிறது. பின்னே புத்தர், சோக்ரதர், கிறிஸ்து, திருவள்ளுவர், திருநாவுக்கரசர், பிரான்ஸிஸ் முனிவர், டால்ஸ்டாய் முதலியோரால் அத்தருமம் காலத்துக்கேற்றவாறு அவ்வப்போது வளர்க்கப்பெற்றது. இந்நாளில் அஹிம்சா தருமத்தை அரசியலில் நுழைத்து உலகைப் பண்படுத்த முயன்று வருவோர் மகாத்மா காந்தி என்பது உலகறிந்ததொன்று. அன்று விருஷப தேவர் கண்ட கனவு, இன்று காந்தியடிகளால் நினைவாய்ச் செயலாய்ப் பரிணமிக்கிறது. இதனல் புது உலகம் மலரும் என்று கருதப்படுகிறது.

புது உலகப் படைப்பைப் பற்றி ஈண்டுச் சிறிது குறித்துச் செல்ல விரும்புகிறேன்; மேலும் சமயம் நேர்ந்துழி நேர்ந்துழி நினைவூட்டிக் கொள்வேன். காந்தியடிகளின் புது உலகம் அஹிம்சா தரும நிலையமாகவே காட்சியளிக்கும். அந்நிலையத்தின் கல், மண், சுண்ணம், நீர் முதலியனவெல்லாம் அஹிம்சைக் கூறுகளே. அதன் கால், சுவர், கூரை முதலிய யாவும் அஹிம்சையாகவே அமைந்து வருகின்றன.

புது உலகம் மார்க்ஸியத்திலும் பேசப்படுகிறதன்றே? நிலமும், பொருளும், அறிவும் பொதுவாயின், புது உலகம் நன்முறையில் அமையுமென்றும், அவ்வுலகம் அஹிம்சை வண்ணமாகப் பொலியுமென்றும் மார்க்ஸியம் கூறுகிறது. உலகம் இந்நிலை எய்தாதவாறு முதல் - தொழில் என்னும் வர்க்க வேற்றுமை தடை செய்கிறது

என்று அது சாற்றுகிறது. தடையைப் போராட்டத்தால் கடத்தல் வேண்டுமென்பது மார்க்ஸியத்தின் உள்ளம். அது குறிக்கும் போராட்டத்தில் இரத்தம் சிந்தாமை காணேம். மார்க்ஸியமும் ஹிம்சையை வெறுக்கவில்லை. அதன் உள்ளப்படி இரத்தப் போரும், இரத்தப் புரட்சியும் நிகழ்ந்து வரல் கண்கூடு. மார்க்ஸியம் போராட்டத்தைக் கடந்து முதுமை எய்துங்கால் பட்டாளம், கொலைக் கருவிச்சாலை, போலீஸ் முதலியன இரா. உலகெலாம் அஹிம்சா தரும மணமே கமழும். மார்க்ஸியம் குறிப்பிடுந் தடையையும் அஹிம்சையால் அதாவது சத்தியாக்கிரகப் போரால் கடத்தல் வேண்டுமென்று காந்தியம் கழறுதல் ஈண்டு உன்னற்பாலது.

காந்தியத்தின் அடிப்படையான நோக்கம் உலகம் அஹிம்சை மயமாதல் வேண்டுமென்பது. மார்க்ஸியத்தின் நோக்கமும் அதுவே. அடிப்படையில் இரண்டுக்கும் எவ்வித மாறுபாடுமில்லை; இவ்வாறே முடிவிலும் இரண்டுக்கும் மாறுபாடில்லை என்றே தெரிகிறது. இடையில் இரண்டும் ஹோயாங்கோ - யாங்டிஸ் கியாங் என்னும் ஆறுகளைப் போலப் பிரிகின்றன. இப்பிரிவைப் பற்றி வாதங்கள் நிகழ்கின்றன. நன்னோக்கத்தை நிறைவேற்ற எம்முறையைக் கொள்வது என்பது குறித்து வெளிவந்துள்ள கருத்துக்கள் பலதிறம்.

காந்தியடிகள் விருஷப தேவர் வழிவழி வந்தவர்; மார்க்ஸ் அவ்வழிவழி வந்தவரல்லர். ஆதலின் கையாளப்படும் முறையில் இரு சார்பிலும் வேற்றுமை விளைந்தே தீரும். மேலைநாடு ஹிம்சையில் இறங்கியே அஹிம்சையைக் காணும் இந்தியா ஹிம்சையில் இறங்கவேண்டுவதில்லை. மேலைக் காற்றால் இந்தியா கேடுறுதவாறு காந்தியம் காத்து வருகிறது. மார்க்ஸியம் மேலைநாட்டில் ஓங்கி

வளர்ந்து பரவி இந்தியாவில் புகுங்கால், அது காந்தியத்தில் ஒன்றும் என்று யான் எண்ணுகிறேன்.

காந்தியடிகள் செயற்கை நரகமாகிய ஹிம்சையில் வீழ்ந்து வருந்தும் உலகை இயற்கை இன்ப அஹிம்சையில் உய்விக்கத் தோன்றிய பெரியார். அவர் மன மொழி மெய்களில் அருள் என்னும் அஹிம்சா தரும மணம் கமழ்ந்துக் கொண்டேயிருக்கிறது. முழு அஹிம்சா தருமமே ஒருவனது இயற்கை வாழ்வின் முடிந்த நிலையாகும். இவ்வருளறத்தை இயற்கை வழி நின்று இந்நாளில் ஓம்பிவருங் காந்தியடிகள் வாழ்வை ஓர் இலக்கியமாக நாம் கொள்வோமாக.

கம்பன் இராமனைப் பாடுவானேன்

★

வித்துவான் திரு. வே. சு. சுப்பிரமணியாச்சாரியார், P.O.L.
(பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி)

கம்பனைக் கவிச் சக்கரவர்த்தி யென்றும், கல்வியில் பெரியவனென்றும் கற்பனைக் களஞ்சியம் என்றும் தமிழ்ப் பெரியார்கள் புகழ்ந்துள்ளமை அனைவரும் அறிந்ததே. அது மட்டுமா? வடமொழிப் புலவரும், மேனாட்டார்களாகிய ரெவரெண்டு பெஸ்கி, டாக்டர் கால்டுவல் போன்ற புலவர்களும் புகழ்ந்துள்ளார்கள்; இத்தகைய பேரறிஞன் புறச்சமய இலக்கியத் தீயை அணைப்பதற்கு யாதேனுமொரு கற்பனைக் கதையை வேண்டியவாறு இலக்கியமாகச் செய்து பகையை வெல்லமுடியாதா? என் இராமனைக் கதாநாயகனாகக் கொண்டு பாடவேண்டும் என்பதைச் சிறிது கவனிப்போம். அப்போது பிரபலமாக விருந்த இலக்கிய தீக் கோளங்களாகிய சீவகன் கதை, உதயணன் கதை, யசோதர காவியம் போன்றவற்றிலே கூறப்பெற்றிருக்கும் கதைகளைக் காட்டிலும் சுவையுடையதாகவும், தூய்மையுடையதாகவும் இருந்தால் அன்றி அவைகளை வெல்லமுடியாது. மேலும் அவைகளின் கதாநாயகர்களுள் ஒவ்வொருவனும் பல மனைவியர்களை மணந்து இன்பம் நுகர்ந்ததாகவும் கண்ணுற்ற பிற பெண்களையும் கலந்ததாகவும் கூறப்பெற்றிருக்கின்றன. காமச்சுவையை அநுபவிக்க வேண்டித் தன் அரசுரிமையையும் தன்னுடைய மந்திரியிடம் ஒப்புவித்து உயிரிழந்த செய்தியையும், ஒரு அரசன் மனைவி இசையைக் கேட்டு உருகிப் பெண்மையை மறந்து, குலமறந்து, கோத்திரம் மறந்து, தொழுநோயாளனாகிய ஒரு யானைப் பாகனைக்கூடி இன்பம் நுகர்ந்த செய்தியும் இவை போன்ற பிறசெய்திகள் பலவும் கூறப்பெற் றிருக்கின்றன.

இவற்றை வெல்லவே கம்பன் என்ற காளமேகம் ஒரே மனைவியை மணந்து, தனக்கென வாழாதவனாகி,

நற்றனயனாகவும், நல்ல சகோதரனாகவும், நல்ல கொழு நனாகவும், நல்ல தோழனாகவும், சுத்த வீரனாகவும், "வலிய அணைத்த சுகம் போல" என்ற வாக்குக்கு மாறாக வலிய அழைத்த பெண்ணையும் வெருட்டிய புலவடக்கமுடையவனாகவும் விளங்கிய இராமனாகிய ஒரு கருணைக் கடலினின்றும் அருள் நீரையுண்டு இராமாயணப் பெரு மழையைப் பொழிந்து புறச்சமய இலக்கிய தீக்கோளங்களை யணைத்தான். இல்லையேல் அவ்வெம்மை யடங்கியிராது. தமிழர் நூல்களை யொழித்திருக்கும்.

ஆயிரமாயிரமாக எட்டு மலைகளில் புறச் சமயிகளாகிய சமணர்கள் வந்து தங்கித் தமிழை வளர்ப்பவர் போன்று தங்கள் மதத்தை வளர்த்துவந்தார்கள் என்பது பின்வரும் செய்யுட்களால் அறியலாகும்.

"பரங்குன் றொருவகம் பப்பாரம் பள்ளி
அருங்குன்றம் பேராந்தை யானை—இருங்குன்றம்
என்றெட்டு வெற்பும் எடுத்தியம்ப வல்லார்க்குச்
சென்றெட்டு மோபிறவித் தீங்கு.

"வண் பெருஞ் சிறப்பின் மாதவம் புரிந்தாங்கு
எண் பெருங் குன்றத் திருந்த முனிவரர்."

"வாயிருந் தமிழே படித்து ஆளுறு
ஆயிரஞ் சமணும் அழிவாக்கினன் —திருநாவுக்கரசர்

விருப்பும் வெறுப்பும் அற்றவர்களும் வேண்டுதல் வேண்டாமையில்லாதவர்களும், "வாழி மண்மேல் விளையாடுவாய்" என்றருளப்பட்டு இறைவனைத் தோழமை கொண்டவரும், கடவுள் புலவருமாய் கி. பி. 9-ம் நூற்றாண்டில் விளங்கிய எமையாளுடைய நம்பிகளாகிய சுந்தரமூர்த்தி நாயனார் தமது திருப்பாட்டில் சமணர்களைக் குறித்து,

"நமண நந்தியும் கருமவீரனும் தருமசேனனும் என்றிவர்
குமண மாமலைக் குன்றுபோல் நின்று தங்கள் கூறையொன்
றின்றியே

ஞமண ஞாஞண ஞாண ஞோண மென்றோதியாரையு நாணிலா
அமணரால் பழிப்புடையரோ நமக்கடிளாகிய வடிகளே.''

இங்ஙனம் அருளிச் செய்தமையானே சமணர்கள் தங்கள் சமய இலக்கியங்களையும் ஏறக்குறைய கி. பி. 5-ம் நூற்றுண்டிலிருந்து எத்தனை முயற்சி செய்துள்ளார்கள் என்பது புலனுகாமற் போகாது. கம்பன் என்ற ஊழிக் காளமேகம் இராமனுடைய குணப்பெருங்கடலில் முகந்து பெய்யாமல் போயிருக்குமானுல், புறச் சமய இலக்கியத் தீ அணைந்திருக்காதென்பதும் திண்ணம். கம்பன் இராம காதையை எழுதியதற்குப் பின்வரும் காரணங்களுண்டு.

நமது நாட்டில் தோன்றும் புலவர்களுள் பெரும் பாலோர் ராமனையே ஏன் பாடவேண்டும் என்று ஒரு கேள்வியைத் தானே கேட்டுக்கொண்டு அதற்குச் சமாதானம் கூறுபவர் போன்று "அங்ஙனம் பாடுவது கவிகளுடைய குற்றமன்று. ராமனுடைய குணக்கூட்ட விசேடத்தின் குற்றமேயாகும்'' என்று ஒரு வடமொழிப் புலவர் கூறியிருப்பதாக "கவீனும் கோ தோஷ:'' என்று தொடங்கும் ஒரு சுலோகத்தால் தெரிய வருகின்றது. நமது சமயப் பெரியார்கள் இறைவனுடைய திருவருளைப் பெரிதும் பெற்றவர்கள். இறைவனுல் தடுத்தாளப்பட்டவர்கள் என்பது அவர்களுடைய வாக்குகளினுலேயே அறியக்கிடக்கும் உண்மையாகும்.

"போதையார் பொற்கிண்ணத்தடிசில் பொல்லாதென
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்''

—திருஞானசம்பந்தர்.

"பொத்தித் தம்மயிர் பறிக்கும் சமணர் பொய்யில்
புக்கழுந்தி வீழாமே போதவாங்கி''

"வஞ்சனைப் பாற்சோறாக்கி வழக்கிலா வமணர்தந்த
நஞ்சமுதாக்குவித்தார் நனிபள்ளி யடிகளாரே''

" கல்வினோ டெனைபூட்டிய மண்கையர்
ஒல்லை நீர்புக நூக்கவென் வாக்கினல்
நெல்லு நீள்வயல் நீலக் குடியரன்
நல்ல நாமம் நவிற்றி யுய்ந்தேனற்றோ "

—திருநாவுக்கரசுகள்.

" அன்றுவந்தென்னை யகலிடத்தவர்முன் ஆளதாகவென் றுவணங் காட்டி "

" வெண்ணெய்நல்லூரில் அற்புதப்பழ வாவணங்காட்டி அடியனுயெனை யாளக்கொண்ட நற்பதத்தை "

—திரு. சுந்தரமூர்த்திகள்.

" யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைப்பேன்
ஆண்டநீ யருளிலையானல் "

—திருவாதவூரடிகள்.

இத்தகைய கடவுளருள் வல்லபம் வாய்ந்த ஞானிகள் வாக்கில் பொய் வருமோ? இவர்களாலும் இராமன் புகழ்ந்து பாராட்டப்பட்டிருத்தல் அறியப்படும்.

" மானனநோக்கி வைதேகிதன்னை யொருமாயையால்
கானதில் வெளவிய காரரக்கன் உயிர்செற்றவன் "

" அணையலைசூழ் கடலன்றடைத்து வழிசெய்தவன் "

—திருஞானசம்பந்தர்.

" **செங்கண்மால்** சிலைபிடித்துச் சேனையோடும் சேது
பந்தனஞ் செய்து சென்றுபுக்குப்
பொங்குபோர் பலசெய்து புகலால்வென்ற பேரரக்கன் "

—திருநாவுக்கரசுகள்.

இனி வைஷ்ணவ பரத்திலும் இராமனது தெய்வத் தன்மை வாய்ந்த கதை காணப்படுகின்றது. பெரியாழ்வார் பாசுரங்களில் 9-ம் திருமொழியின் 2, 4, 6, 8, 10-ம் பாடல்கள். 10-ம் திருமொழியின் 10 பாடல்கள்.

குலசேகராழ்வாரருளிய 8-ம் திருமொழி காகுத்தன் தாலாட்டாக வரும் 10 பாடல்கள். 9-ம் திருமொழியில் தசரதன் புலம்பலாக 10 பாடல்கள், 10-ம் திருமொழியில் 10 பாடல்களும் இன்னும் பல தனிப் பாசுரங்களும் இராம காதையை விரிவாகக் கூறுகின்றன. நாலாயிர பிரபந்தத்தினுடைய பரிணாமமே கம்ப ராமாயணம் என்று கூறுதல் மிகையாகாது. விரிவஞ்சி சிலவே காட்டப் புகுகின்றேன்.

"கம்பமா கடலடைத்து இலங்கைக்குமன் கதிர்முடியவை பத்தும்
அம்பினா லறுத்து அரசு அவன் தம்பிக்கு அளித்தவன்"

—திருமங்கை மன்னன்

"புலையறமாகிநின்ற புத்தோடு சமணமெல்லாம்
கலையறக் கற்ற மாந்தர் காண்பரோ கேட்பரோதாம்
தலையறுப்புண்டுஞ் சாவேன் சத்தியம் காண்மின் ஐயா
சிலையினால் இலங்கை செற்ற தேவனே அநீகதேவன்"

—திருத்தொண்டரடிப்பொடியார்.

கடவுள் அருள் நிலையிலிருந்து வாய்மையறிந்து பாட வல்ல சிவனடியார்களும் ஆழ்வாராதியரும் இராமனை யிவ்வாறு திருமாலினமிசமாக வைத்துப் போற்றி யுள்ளனர். அன்றியும் பழந்தமிழ்ப் புலவர்கள் இயற்றிய இலக்கியப் பரப்பினுள்ளும் இராமாயணச் செய்தியுள்ளது.

"வெல்போ ரிராமன் அருமறைக் கவித்த
பல்வீழ் ஆலம்போல" அகம்: 70.

"கடுந்தெற லிராமன் உடன்புணர் சீதையை
வலித்தகை யரக்கன் வெளவிய ஞான்றை
நிலஞ்சேர் மதரணி கண்ட குரங்கின்
செம்முகப் பெருங்கிளை யிழைப்பொலிந் தாஅங்கு"

புறம்: 378.

மராமர மேழு மெய்த வாங்குவிற் றடக்கைவல்வி
லிராமனை வல்லெனென்பதி சையலாற் கண்டதில்லை
யுராமன மிவன் கணின்றி யுவக்குமா செய்வ லென்று
குராமலர்க் காவினீங்கிக் கோயிலே கொண்டு புக்கான்.

சிந்தாமணி : 1643.

"மீட்சி யென்ப திராமன் வென் றூனென
மாட்சியி லிராவணன் தோற்றமை மதித்த

—மணிமேகலை : 27 : 53-54.

"நெடியோன் மயங்கி நிலமிசைத் தோன்றி
அடலரு முந்நீ ரடைத்த ஞான்று
குரங்குகொணர்ந் தெறிந்த நெடுமலை யெல்லாம்
அணங்குடை யளக்கர் வயிறு புக்காங்கு"

—மணிமேகலை : 17 : 10-12.

"தாதை யேவலின் மாதுடன் போகிக்
காதலி நீங்கக் கடுந்துய ருழந்தோன்
வேத முதல்வற் பயந்தோ னென்பது
நீ யறிந்திலையோ" —சிலம்பு : ஊர்காண் : 46-49.

"**மூவுலகு மீரடியான் முறைநிரம்பா வகை முடியத்**
தாவிய சேவடி சேப்பத் தம்பியொடும் கான் போந்து
சோவரணும் போர்மடியத் தொல்லிலங்கை கட்டழித்த
சேவகன் சீர் கேளாத செவியென்ன செவியே
திருமால் சீர் கேளாத செவியென்ன செவியே"

—சிலம்பு : ஆய்ச்சியர் குரவை.

அன்றியும் உதயணன் காதையில் மகதம் : 24 : 89-92. உஞ்சை : 36 : 338-41; 55 : 109-110 வரிகளாலும் இராமனது செய்தி கூறப்பட்டுள்ளது. வடமொழியிலும் இராமனைப்பற்றிய பழைய விலக்கியங்கள் பலவுள. தனக்கு முன்னமிருந்த புலவர்களது வாய்மையைக் கைக்கொண்டு வால்மீகருடைய காவியத்தின் நறுஞ் சுவையைப்

பெய்து தெய்வப் பநுவலை யியற்றினன். இந்நூலழிந்தால் புறச்சமய விலக்கியங்கள் தலையெடுத்து சதித் தாண்டவஞ் செய்யுமென்பதில் ஐயமில்லை.

இனி யிராவணனை மேற்காட்டிய கடவுட் புலவர்கள் அரக்கனென்று கூறுகின்றார்களா, தமிழனென்று கூறு கின்றார்களா வென்பதை யாராய்வோம்:

"மான நோக்கி வைதேகி தன்னை யொருமாயை யால்
கானகத்தில் வௌவிய காரரக்கனுயிர் செற்றவன்"

—திருஞானசம்பந்தர்.

"மறுத்தானோர் வல்லரக்க னீரைந்து முடியினொடு
தோளும் தாளு மிறுத்தானை" —திருநாவுக்கரசுகள்.

"எரிநெடு வேலரக்க ரொடும் இலங்கை வேந்தன் இன்னுயிர்
கொண்டு அவன் தம்பிக்கரசு மீந்து" —குலசேகரர்.

"அரக்கரங்கரங்க வெஞ்சரம் துரந்த ஆதிநீ"

—திருமழிசையார்.

"அரக்கர் தங்கள் கோன்போலும் என்றெழுந்தான்
குன்றமன்ன இருபது தோள்களுடன்
துணித்தவொருவன் கண்டீர்" —திருமங்கையார்.

மேற்காட்டிய அருட்புலவர்கள் வாக்கால் இராவணன் அரக்கர் கோனென்றே கூறப்பட்டிருப்ப அதனோடு மாறுபட்டு அவனைத் தமிழனென்று கூறுவது பொருந்துமோ! அவ்வாறு கூறுவதற்கு இலக்கிய ஆதாரம் வேறு யாதோ! முன்னோர் மொழி பொருளைப் பொன்னேபோல் போற்றுவது புலவர்களின் வழக்கன்றோ! கம்பனே புதிதாகக் கூறிப் புனைந்துரைத்து காமமயக் கூட்டுவானேல் நாம் விரும்பியவாறெல்லாம் குற்றங்காட்டவும் இடம் பெற்றிருப்போம். இராமனுடைய கதைப்போக்கு முன்னோர்களுடையதாகும். கதை நடையில் கம்பனைக் குறை கூறுவதில் பயனில்லை. இலக்கியச் சுவையைக்கண்டு மகிழ்வோமாக! சுபம்!

திருக்கோவில் நுழைவு

வித்துவான் திரு. மறை. திருநாவுக்கரசு

எல்லாரு மோர்குலம் எல்லாரு மோரினம்
எல்லாரு மிந்தியா மக்கள்
எல்லாரு மோர்நிறை எல்லாரு மோர் விலை
எல்லாரு மிந்நாட்டு மன்னர். —பாரதியார்.

எங்கும் ஆதி இந்துக்களுக்குத் திருக்கோவில்களைத் திறந்துவிடும் நிகழ்ச்சியும் முயற்சியும் காணப்படுகின்றன. நமது இணையற்ற இந்து சமயத்தில் இஃதோர் புரட்சியே யென்ற கூற்று அச் சமயத்தின் கருத்துக்களை யறியாதார் வாய்ப் பறையே யாகும். உலகில் உயர்ந்த இந்து சமய வுண்மைகளை நன்குணராதவராயினும் மிக்க சமயப் பற்றுடைய பாமரர் சிலர் நமதிந்து மதத்தில் தீண்டாமை யுண்டென்றும் திருக்கோவிலினுள் நுழைய ஆதி இந்துக்களுக்கு உரிமை யில்லையென்றும் கருதுகிறார்கள். அவர்களுக்கு உண்மையை யுணர்த்தி இந்து மதத்தில் தீண்டாமைக்கு இடமில்லை யென்றும் திருக்கோவில் திறப்பு அடியாரனைவருக்கும் இயல்பான உரிமையை யென்றும் ஒரு சிறிது விளக்குவதே இச்சிறு கட்டுரையின் நோக்கமாகும்.

இனி, இனிமை நிறைந்த இந்து சமயத்தில் தீண்டாமைக்கு இடம் சிறிதுமில்லை என்பதனை முதற்கண் காண்போம். இந்து மதத்தின் இரு கண்களென இலங்குவன சைவமும் வைணவமுமாம். ஏனைய சுமார்த்தம், மத்துவம், கௌமாரம், சாந்தேயம் முதலியன இவ்விரண்டில் அடங்குவனவேயாம். ஆதலின் சைவ வைணவ சமயக் கொள்கைகளிலாயினும், வேதங்களிலாயினும் அடியார்களின் வாழ்க்கையிலாயினும் தீண்டாமையை ஏற்கும் சொற்களோ, தொடர்களோ, பாடல்களோ, நிகழ்ச்சிகளோ ஒன்றேனுமில்லை. இதற்கு மாறாகத் தீண்டாமை

யை யெதிர்த்து மறுக்கும் பாடல்களும் கருத்துக்களும் நிகழ்ச்சிகளும் ஏராளமாயுள்ளன. சிவஞானபோதம், பகவத்கீதை, கைவல்ய நவநீதம் முதலிய இந்துசமய தத்துவ நூல்களில் உலகம், உயிர், கடவுள் என்னும் முப்பொருளுண்மை யாராய்ச்சிகளும் காணப்படுகின்றனவே தவிரசாதியின் உயர்வு தாழ்வுகளைப்பற்றி ஒரு குறிப்புங் காணப்படவில்லை. அந் நூல்களிலெல்லாம் பொதுவாக உயிரியல்பு என்னும் ஆத்தும தத்துவம்பற்றிப் பேசப்படுகின்றதேயன்றி இன்னகுலத்து இன்னவுயிர்க்கு இன்னவியல்பென்னும் பேச்சில்லை. (மூவகையாருயிர்ப் பகுதியினும் சாதி வேறுபாடு குறிக்க வில்லை.) ஆனல் மனு முதலியோரெழுதிய ஸ்மிருதிகள் என்ற வாழ்க்கைச் சட்ட நூல்களில் தீண்டாமையையும் பிறப்பில் உயர்வு தாழ்வுகளையும் கூறும் பகுதிகள் நிறைந்து காணப்படுகின்றனவேயென்றுல் அவைகள் இந்து சமூக நூல்களேயன்றிச் சமய நூல்களாகா. சமூக நூல்கள் வேறு. சமய நூல்கள் வேறு. சமய நூல்களுக்கு மாருகச் சமூக நூல்கள் சொன்னல் அவற்றை ஒதுக்கி விடலாம். ஒரு நாட்டில் பல்வகைச் சமூகங்கள் இருந்தாலும் சமயப் பகுதியில் அவையெல்லாம் ஒத்த கருத்துடையனவாகவே இருக்கின்றன.

நமதருமையான இந்திய நாட்டில் மொழியானும், குலத்தானும், வகுப்பானும் வேறுபட்ட தமிழர், தெலுங்கர், வங்காளியர், மாராட்டியர், பார்ப்பார், செட்டியார், வேளாளர், நாயகர் முதலியோர் சமயவளவில் ஒத்த கருத்துடையவர்களாக இருப்பதே இதற்குரிய சான்றுகும். இதுபோலவே கிறிஸ்துவர், இஸ்லாமியார் முதலிய சமயத்தவர் நாட்டானும் மொழியானும் பிறவாற்றுனும் வேறுபட்டாரேனும் சமய அளவில் ஒத்த கருத்துடையவர்களாக விளங்குவது கண்கூடேயாம். இதுபோலவே அக்கிறிஸ்துவ, இஸ்லாமிய சமயத்தவர்கள் சமூக சட்டங்களில் வேறுபட்டவர்களாகவும் இருக்கின்றனர். இவற்றுல் இங்கு முடிவாகக் கொள்ளற்பாலது யாதெனில்:

சமூகம் பற்றிய கோள்கைகள் யாதாயினும் சமயக் கோட் பாடுகள்பற்றிய வகையில் ஒன்றுபட்ட கருத்தும் நடத்தை யும் உடையவர்களே ஒரு சமயத்தைச் சார்ந்தவர் என்ப தற்கு அறிகுறியாகும் என்ற உண்மை யொப்பப்படுகின் றது என்பதாம்.

அவ்வகையில் பார்க்குமிடத்து சமூக சட்ட நூல்க ளாகிய ஸ்மிருதிகளைத் தள்ளி இந்து சமய நூல்களை நாம் ஆராய்ந்துப் பார்த்தால் அங்கே தீண்டாமையில்லை. திருக்கோயில் நுழைவு உள்ளிட்ட எல்லாச் சமய வுரிமை களும் இந்துக்களனைவருக்கும் பொதுவான தென்ற வுண்மைகள் வெள்ளிடைமலையென விளங்கும். கீதை யிலும் மிருதிகளில் கூறப்பட்ட பிரம்ம சத்திரிய வைசிய சூத்திர குலவமைப்பு வேற்றுமைகள் மறுக்கப்பட்டன. ஆனால் அக்கீதையானது செயலினால் (கர்மத்தால்) தனிக் குலத்தாருக்கல்ல—தனிப்பட்டவர்களுக்கு அக்குல வேற்றுமையைக் கூறுகின்றது. கீதை சொல்லும் முறைப் படி பார்த்தால் ஆண்டவனைப் போற்றி நின்ற நந்தனார் பிராம்மணராவர். அவனை மறந்து ஆசையாலுழலும் அந்தணன் நீசனாவான். எனவே, கீதை யொழுக்கத்திற்கு உயர்வு உரைக்கின்றதேயன்றிப் பிறப்பைச் சிறப்பிக்க வில்லை யென்பது நன்கு விளங்கும்.

இனி இந்து சமயத்தில் தீண்டாமைக்கிடமில்லை யென் பதைச் சைவ வைணவ சமய வேதச் சான்றுகள் கொண்டு பார்ப்போம். சைவ சமயாசிரியரான திருநாவுக்கரசு நாயனார் தம் தேவாரத் திருமறையில்,

“ சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்
கோத்திரமும் குலமுங் கொண்டு என் செய்வீர்
பாத்திரம் சிவமென்று பணிதிரேல்
மாத்திரைக்குள் அருளும் மாற்பேறரே ” என்றும்

“ அங்கமெலாங் குறைந்து அழுகு தொழு நோயராய்
ஆவுரித்துத் தின்றுழலும் புலைய ரேனும்

கங்கைவார் சடைக்கரந் தார்க்கன்ப ராகில்
அவர் கண்டீர் யாம் வணங்குங் கடவுளாரே.”

என்றும் அருளியவாற்றால் தீண்டாமையை வெறுத்த செய்தியறியப்படும். இன்னும் திருஞான சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் உள்ளிட்ட சிவனடியார்களின் பாடல்களில் இத்தகைய கருத்துக்கள் மிகுதியாயுள்ளன. இவர்கள் ஆண்டவனையும், குலவேற்றுமை நோக்கமின்றி யடியார்களையுமே பாராட்டி வழிப்பட்டிருந்தனர். அவற்றிற்கு ஏற்ற சான்றுகளில் சிலவற்றை யீண்டுக் காண்போம்.

வேளாளராகிய அரசுகளை அந்தணராகிய அப்பூதியடிகள் வழிப்பட்ட முறைமையடியிற்கண்ட செய்யுளால் நன்கு விளங்கும்:—

“மனைவியாருடன் மக்கள் மற்றும் உள்ள சுற்றத்தோர், அனைவரையும் கொண்டு இறைஞ்சி ஆராத காதல் உடன், முனைவரை உள் எழுந்தருளுவித்து அவர்தான் முன் விளக்கும், புனைமலர் நீர் தங்கள்மேல் தெளித்து உள்ளும் பூரித்தார்.” திருஞான சம்பந்தர் திருநீலகண்ட யாழ்ப்பாணரைத் தம்முடன் பிரியாது வைத்திருந்துப் போற்றினர். அன்றியும் பாணனர் தம் மனைவியுடன் திருநீல நக்கனரது யாகசாலையில் இரவில் பள்ளி கொள்ளவும் இடம் பெறுவித்தார். சுந்தர வந்தணர் பல மரபைச் சார்ந்த அறுபான் மூன்று அடியார்களுக்கும் தன்னை அடிமையாக வைத்துக் கூறியுள்ளார். இவ்வடியார்களுள் நந்தனருமொருவர். திருக்குறிப்புத் தொண்டர் வண்ணர் வகுப்பினர். பல்வேறு குலமரபைச் சார்ந்த இவ்வடியார்கள் அனைவரையும் சிவ சமமாக வைத்து கோயில்களில் வழிபடக் காண்கிறோம். இவ்வாறாக, சமய ஏற்பாட்டில் அறவே மறுத்தொதுக்கப்பட்ட சாதி வேற்றுமை, தீண்டாமை முதலியவற்றை நாம் பாராட்டித் திரிவது வியப்பினும் வியப்பே!

இனி வைணவ சமயத்திலும் சைவம் போலவே தீண்டாமைக்கும் குல வேற்றுமைக்கும் சிறிதும் இடமில்லையென்பதை யொரு சிறிது காட்டுவோம்:

"குலந்தாங்கு சாதிகள் நாலிலுங் கீழிழிந்து எத்தனை
நலந்தா னிலாத சண்டாள சண்டாளர்களாகிலும்
வலந்தாங்கு சக்கரத்தண்ணல் மணிவண்ணற்கா ளென்றுஉள்
கலந்தார் அடியார்தம் அடியார் எம்மடிகளே"

ஆழ்வார்களும் ஒரு குலத்தினர் அல்லர். பல்வேறு குலத்தைச் சார்ந்தவர்களே. ஆழ்வார் என்ற நிலைமையில் சற்றும் வேற்றுமை அவர்களுக்கு இடையில் இல்லை. அவர்களனைவரும் ஒரு படித்தாகவே திருக்கோயிலில் வழிப்படப்படுகின்றனர்.

இனி இந்து சமயக் கோயில்களுள் ஆதியிந்துக்களும் நுழையவுரிமையுண்டென்பதற்குச் சுருக்கமான சான்றுகள் இரண்டொன்றைக் காட்டுவோம்:

இந்து சமய நூல்களில் ஆதியிந்துக்களுக்குத் திருக்கோவில் திறப்புரிமை கூடாதென்று எங்கும் கூறப்படவில்லை. வகுப்புணர்ச்சி மேலிட்டு சுயநலக் கருத்தால் உந்தப்பட்டுச் சிலர் செய்த சூழ்ச்சியினை சமயத்தின் மேலேற்றிக் கூறுதல் அறிவுடைமையின்பால் படாது. சாம்பானுக்குச் சபேசன் ஆணையால் கொற்றவன் குடியார் முத்தியருளவில்லையா! சாதிச் செருக்குற்ற உலோக சாரங்கர் என்னும் அருச்சகர் தந்தோளின்மேல் திருப்பாணாழ்வாரைத் தாங்கிச் சென்று அரங்கநாதன் முன் சேர்க்கவில்லையா! நந்தனார் நடராசர் முன்சென்று அவருருவில் இரண்டறக் கலக்கவில்லையா! இறைவனருளால் முதற் குருமார்கள் கொடுத்த வுரிமைகளை மறுக்க நமக்கு இறையேனும் உரிமையுளதோ!

உண்மை யிவ்வாறாகச் சிலர் அரசியல் நோக்கங் கொண்டு திருக்கோயில் திறப்பைச் சமயவாதிகள் வற்

புறுத்துகின்றார்களென்று நினைத்தல் தவறாகும். முப்ப தாண்டுகளுக்கு முன்பிருந்தே சைவ சித்தாந்தத் தலைவர் கள் திருக்கோயில் திறப்புரிமையை வற்புறுத்தி எழுதியும் பேசியும் வருகிறார்கள். அரசியல் வாதிகள் அப்பொழுது அதனை அறியவில்லை. அரசியல் சமூகத் துறைகளுக்கே அன்றி இந்து சமய புனித நோக்கங்களுக்காகத் திருக் கோயில் உரிமை மட்டுமல்ல. மற்ற இந்துக்களுக்குள்ள எல்லா உரிமைகளும் ஆதி இந்துக்களுக்கு வழங்கப்பட வேண்டும். அதுவே இந்து சமயத்தின் கொள்கையாகும். ஏனெனில், எல்லா உயிர்களையும் கடவுளாய்க் காணும் இந்து சமயத்தில் தீண்டாமைக்கும் வகுப்புணர்ச்சிக்கும் இடமேது?

இந்துக்களே! இந்து சமய வுண்மைகளைக் கடைப் பிடியுங்கள். அதுவே உலக அமைதிக்கும் உண்மைக்கும் இன்பத்திற்கும் உகந்ததாகும்.

"எவ்வுயிரும் நீங்காது உறையிறை சிவம் என்று
எவ்வுயிர்க்கும் அன்பா யிரு" —சிவஞான தீபம்.

"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின்" —திருமந்திரம்.

மகளிர் புதுப்புனல் ஆடல்

திருமதி V. B. பத்மாவதி

"பொன்னுடல் இன்புற நீர்விளையாடி இல்
போந்தது மிந் நாடே" —பாரதியார்.

உலகத்தின் வெப்ப மண்டலத்திலேதான் மலர்வனங்களும், தீங்கனிச் சோலைகளும், நன்னீர் யாறுகளும், செந்நெல் வயல்களும், இன்னிசை அருவிகளும், பன்னிறப் பறவைகளும் பிறவும் வாய்ந்து அவற்றினிடையே வாழும் மக்களின் உள்ளத்தைக் களிப்பிக்கும். இவ்வியற்கை வளமெல்லாம் நிறைந்த நாடுகளில் தமிழ் மண்டலமே இயற்கை மகளுக்கு அரங்கமாக விளங்குகிற தென்பது மிகையாகாது. ஒவ்வொரு மொழியினது இலக்கியமென்னும் உரை கல்லில் இயற்கை அழகைப் புலவர்கள் இழைத்து வைத்திருக்கிறார்கள். அம்மாற்றுகளை ஒப்பு நோக்கிப் பார்த்தால் இவ்வுண்மை நன்கு விளங்கும். இயற்கையழகே புலமை உணர்ச்சியை எழுப்பும். அவ்வுணர்ச்சியை வளர்ப்பதும் இயற்கைக் காட்சியே யாகும். பண்டைத் தமிழ் மக்கள் இயற்கையோடு இயைந்து வாழ்ந்தனர். இயற்கைக் காட்சியும் தமிழ் மக்கள் வாழ்க்கை நிகழ்ச்சியும் உடன் உடனுகை நிகழ்ந்தன. இயற்கை வனப்பைக் கண்டு மகிழ்ந்து மகிழ்ந்துத் தம் வாயினால் செய்யுள் அமுதம் உகுத்தனர். செய்யுளோசையை இயற்கையோசையோடு இழைத்து இனிமையாக்கினர். வண்டின் இசையும் பாவிற்குப் பண்ணாய் அமைந்தது. குன்றோடு எதிர் கூவியும், குயிலொடு பாடியும், மயிலொடு மாறாடியும் மகளிர் பாடலும் ஆடலும் பயின்றனர். பூம்பொழிலும், புதுப்புனலும் அவர்களுக்குக் களி அரங்காயின. இயற்கை வாழ்க்கையில் திளைத்த மகளிர் தாம் ஈன்ற மக்களுக்கு வீரவுணர்ச்சியை ஊட்டினர். புலமைப் பண்பைப் பெருக்கினர். இவர்கள் வாழ்க்கையில் இயற்கை மணம் கமழ்ந்தது.

இன்பத்தேன் நிறைந்தது. அவர்கள் களித்துக் கழித்த நாகரிக எச்சமே இக்காலத்து மகளிர்க்கு விநோத நாகரிகமாய் விளங்குகிறது என்று கூறலாம்.

அவர்கள் இயற்கை யின்பத்திற்கும் இவர்கள் செயற்கை மயக்கத்திற்கும் எத்துணை தூரம்! பண்டைக் கால மகளிர் நாகரிகத்திற்கு எடுத்துக் காட்டாக இப் புனலாட்டுச் செய்தி எழுதப்பட்டது.

செந்தமிழ் மணங்கமழும் வையை யாற்றிலே புதுப் புனல் வந்தது. அதன் வரவை உணர்ந்த மகளிர் எவ்வகையால் தம்மைப் புனைந்துக் கொண்டுப் புறப்பட்டனர் என்பதைப் பரிபாடல் என்னும் நூல் கூறுகிறது.

ஒளிவிளங்கு பொன் கலன்களை அணிவர். பொன் பூவைத் திருத்துவர். அகில் புகையால் செய்த சாந்தைப் பூசிக் கூந்தலைக் குழலாக முடித்து வெட்டி வேரைத் தொடுத்துக் கட்டிய மலர்மாலையைச் சூடுவர். நீராடுதற்கேற்ற புடவை உடுத்து, இடையில் வடங்களைப் பூணுவர். வாசம் பொருந்திய வெண்ணெய்க் கலவையைப் பூசிக் கொள்ளுவர். பின் தமது செயற்கை அழகைக் கண்ணாடியில் நோக்கி மகிழ்ந்தபின், பஞ்ச வாசங்கலந்த பாக்கை வாயிலிட்டு மெல்லுவர். கையில் வளை அணிவர். தோளில் தொடி யிடுவர். காலில் மோதிரம் இறுத்துவர். மலர் மாலையைத் தோளில் சூடி ஆராதனைக்குரிய அவியும் பொன்மீனும் பிறவும் ஏந்திப் பிடியை நடையால் வென்ற அன்னப் பேடையைப் போல் நடந்து வையைக் கரையை அடைவர். புழுகு நெய்யிட்டுச் சிறந்த துருத்தியும், பனிநீரால் மணக்கும் தொளைக் கொம்பும், நெட்டியால் செய்த மிதவையும், தேரும் பிறவும் விளையாடற் கருவிகளாகக் கொண்டு செல்லுவர்; நீர்க்கரையில் நிரை நிரையாக நின்று நீரையூன்றி நோக்கி மகிழ்வர். புனலை வியந்துப் பேசுவர். சிலர் வங்கியத்தின் இசையை யெழுப்ப முழவு தடாரி தண்ணுமை முகுளி என்னும் இவற்றைக் கொட்டி நிருத்த மாடுவர். அதற்கு ஒக்க அரிவையர் தம் முன்கையால் தாளத்தை அறுத்து நிற்பர். இம்மங்கல வோசை வானை

யும் போர்க்கும். மிதவையை நீர்க்குள் உழக்கியும், துருத்தியால் கலவை நீரை யொருவர்மேல் ஒருவர் சொரிந்தும் ஆடி யிளைத்த பின் புணைகளைக் கைவிட்டுக் கரையேறுவர். புடவையிலிருந்து பொசியும் நீரைப் பிழிந்து உடுத்துக் கொள்ளுவர். குங்குமச் சேற்றை அகிற் சாந்தோடும் கருப்பூரத்தோடும் கூட்டி நெருப்பின் நிறம்பட அரைத்துக் கூந்தலில் தேய்த்துக் குளிப்பர். வேறு சிலர் நாவல், கடுக்காய், நெல்லிக்காய், தான்றிக் காய், ஆல், அரசு, அத்தி, இத்தி, முத்தக்காசு, மாந்த ளிர் என்னும் பத்து வகைத் துவர்களையேனும் இழை பொடியேனும் இட்டுப் பிசைந்து மூழ்குவர். பின் கரை யேறி பூத்தொழில் அமைந்த வெண் துகிலைக் குழலில் சுற்றி முறுக்கி ஈரத்தைப் போக்குவர். அகில் கட்டையை அழலில் இட்டுப் புகைத்து மெய்யினும் தலைமயிரினு முள்ள ஈரத்தைப் புலர்த்துவர். பின் மார்பில் கலவைக் குழம்பை மெழுகுவர். தக்கபடி அலங்கரித்துக்கொண்ட பின் இரப்போர்க்குத் தானஞ்செய்வர். மாலையும் சந்தன மும் கஸ்தூரியும் இழைகளையும் நீரில் பெய்வர். பொன் னால் செய்த நந்து, நண்டு இறவு வாளை என்னும் இவற் றைப் புனலின்கண் இட்டு, "விளைக பொலிக" என்று வாழ்த்துவர். இவ்வாறு புனலாடிய பின் களிப்புற்றுத் தம்மூர்க்குத் திரும்பி வருவர். இஃது களிப்புனலாட லாகும். மார்கழி மாதத்துத் திருவாதிரை நாளிலே அம்பாவாடலைக் கன்னியர் மேற்கொள்ளுவர். இஃது தைந்நீராடல் என்னும் தவம். விடியல் பொழுதிலே முது ம்களிர் குளிர்ந்த நீரில் மூழ்கி சடங்கு முறையைக் காட்டு வர். அந்நாளில் மகளிர் புலன்களை அடக்கிக் காமக் குறிப் பில்லாமல் நீரில் மூழ்குவர். இஃது விரதநீராடல்.

இவ்வாறு பண்டைத் தமிழ் மகளிர் மேற்கொண்ட புனலாட்டால் அவர்களது நாகரிக இயல்பு நன்கு விளங்குகின்றதன்றோ! அவர்கள் இயற்கையோடு ஒத்து வாழ்ந்த இன்பநிலை எத்துணைச் சிறப்புடைய தென்பதை உற்று நோக்குங்கள்!

TAMIL NADU ARCHIVES

சந்தேகம் ★

டி. எஸ். வேலன்

சாந்தா வழக்கம்போல் உல்லாசமாகப் பாடிக்கொண்டே தன் கணவனின் அறைக்குள் நுழைந்து அங்கிருந்த பெரியதொரு நிலைக்கண்ணாடியின் முன்பு நின்று தன்னழகை தானே பார்த்து மகிழ்ந்தாள். கையில் வைத்திருந்த ரோஜா மலரை தலையில் அணிந்து கொண்டாள். அப்போது அந்த நிலைக் கண்ணாடியின் அருகிலிருந்த மேசைமீது வைக்கப்பட்டிருந்த கடிதமொன்று அந்த நிலைக்கண்ணாடியில் பிரதிபலித்தது. அக்கடிதம் சாந்தாவின் கவனத்தைக் கவர்ந்தது. உடனே சாந்தா மேசைமீதிருந்த அக்கடிதத்தைக் கையிலெடுத்துக் கடிதத்தைப் படிக்க அவள் உள்ளம் அவசரப்பட்டது. அதற்குக் காரணம் அக்கடிதம் ஓர் காதல் கடிதம். அதில் கீழ்வருமாறு எழுதப்பட்டிருந்தது.

"என்னுருயிர்க் காதலியே, உனக்குக் கடிதமெழுதி நெடுநாட்களாகின்றன. நேரில் கண்டு பேசலாமென்றால் உன் பெற்றோர் அதற்கு இடைஞ்சலாக இருக்கிறார்கள். கடிதமெழுதலாமென்றால் நேரமில்லை. மேலும் என் மனைவி ஒரு சனியன்; நான் உனக்கு எழுதும் கடிதத்தை அவள் கண்டுவிட்டால் என்ன நடக்குமென்பதை என்னால் எழுதக்கூட முடியவில்லை. அவள் வீட்டிலில்லாத சமயத்தில் கடிதமெழுதலாமென்றால் அப்படிப்பட்ட சந்தர்ப்பம் கிடைப்பதும் அரிதாக யிருக்கிறது. ஆனால் இன்று ஏதோ நல்ல வேளையாக அடுத்த வீட்டுக்காரியுடன் வம்பு வளர்க்க சென்றிருந்தாள் அந்த சமயத்தில்தான் நான் உனக்கு இந்தக் கடிதத்தை எழுத முடிந்தது. கண்ணே சரோஜா நமது காதல் என்றுதான் கனியாகுமோ தெரியவில்லை........"

என்று எழுதப்பட்டிருந்ததைக் கண்ட சாந்தா திடுக்கிட்டாள். தன் கண்களை நம்பாமல் கடிதத்தைத் திருப்பித் திருப்பிப் படித்தாள். கடிதம் தன் கணவன் ரங்கராஜுவினாலேயே எழுதப்பட்டதென்பதையும் தெரிந்து

கொண்டாள். அது ரங்கராஜுவின் கையெழுத்து தானென்பதில் சந்தேகமேயில்லை. ஆனால் கடிதத்தில் கையெழுத்துப் போடப்பட்டில்லை. இப்படிப்பட்ட நிலையில் சாந்தாவுக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை. தன் கணவன்மீது அவளுக்கு ஒருபுறம் கோபமும், மற்றொருபுறம் சந்தேகமும் ஏற்பட்டது. எண்ணாத எண்ணமெல்லாம் எண்ணியெண்ணி ஏங்கினாள். பெருமூச்சுவிட்டாள். தன் கணவன் எவள் மீதோ காதல் கொண்டுவிட்டார் என்பதை திட்டமாக முடிவு செய்தாள். சரி, இருக்கட்டும். இவ்விதம் மற்றொரு மாதின் காதல் வலையில் சிக்கிய தன் கணவனுக்குச் சரியான பாடம் கற்பிக்கவேண்டுமென்று முடிவு செய்தாள். கடிதத்தை மடித்து தன்னிடமே பத்திரமாக வைத்துக்கொண்டாள். அப்பொழுது மாலை மணி ஆறு.

* * *

சாந்தாவின் கணவன் ரங்கராஜு ஆபீசிலிருந்து வீடு வந்து சேர்ந்தான். எப்பொழுதும் தன்னை அன்புடன் வரவேற்றும் சாந்தா அன்று மாத்திரம் காணப்படவில்லை. ரங்கராஜு தன் உடைகளைக் கழற்றியபடியே சாந்தா.... சாந்தா என்று இரண்டுமுறை கூப்பிட்டான். அவனுக்கு எவ்வித பதிலும் கிடைக்கவில்லை. படுக்கை அறைக்குச் சென்று பார்த்தான். சாந்தா கலங்கிய கண்களுடன் கட்டிலின்மீது படுத்திருந்தாள். இதைக் கண்ட ரங்கராஜு திடுக்கிட்டு, சாந்தா ஏன் இப்படிப் படுத்திருக்கிறாய் உடம்புக்கு என்ன?" என்று பரிவுடன் கேட்டான்.

"உடம்புக்கு ஒன்றுமில்லை?"

"என்றாள் சாந்தா"

"வேறென்ன?"

"மனதிற்குத்தான் நோய்"

"ஆ! என்ன சாந்தா! நீ சொல்லுவதொன்றும் எனக்குப் புரியவேயில்லையே!

"ஆம். புரியாதுதான். எப்படிப் புரியும்? காதல் அவ்வளவு தூரம் கருத்தில் பதிந்திருக்கிறது!"

"ஆ! சாந்தா என்ன உளறுகிறுய். எனக்கொன்றும் புரியவில்லையே. திடீரென்று உனக்கு என்ன குறைவந்து விட்டது. சொன்னல்தானே தெரியும்."

"உம். போதும், போதும். ஏன் என் வயிற்றெரிச்சலைக் கிளப்புகிறீர்கள்? உங்களைப் போன்ற உத்தமர்களைக் கணவராகப் பெற்ற என் போன்றவர்களுக்கு என்ன குறை!"

"சாந்தா என்ன இப்படிப் பேசுகிறுய்? என்மீது உனக்கென்ன சந்தேகம் தோன்றிவிட்டது."

"சந்தேகமா? அதெப்படி யிருக்கும்? ஒன்றுமே தெரியாதவர்களுக்கல்லவா சந்தேகம். கையுங் களவுமாக அகப்பட்டுக் கொண்ட பிறகு கூடவா சந்தேகம்?"

"சாந்தா, இதோ பார் நீ என்னமோ தவருக எண்ணிக் கொண்டிருக்கிறுய். அப்படிப்பட்ட வீண் எண்ணங்களை விட்டுவிடு. எழுந்திரு காப்பிக் கொண்டு வா."

சாந்தா எழுந்தாள், சற்று முடுக்காகச் சமையலறைக்குச் சென்று காப்பியைக் கொண்டுவந்து ரங்கராஜுவின் மேசைமீது வைத்துவிட்டு மீண்டும் வந்து படுத்துக் கொண்டாள்.

* * *

இப்படியாக சாந்தாவுக்கும் ரங்கராஜுவுக்கும் வம்பு வளர்ந்துகொண்டே போயிற்று. ரங்கராஜுக்கு உண்மையிலேயே சாந்தாவின் கோபத்துக்குக் காரணம் இன்னதென்று புரியவில்லை. ஆனல் நாளுக்கு நாள் சாந்தாவின் சந்தேகம் நிலைத்துக்கொண்டு வருவதைக் கண்ட ரங்கராஜுவுக்கு அவள்மீது அடக்கமாட்டாத கோபம் உண்டாயிற்று. நாளுக்கு நாள் அவளை வெறுக்கத் தலைப்பட்டான். தன் கணவன் தன்மீது வெறுப்புக்கொண்டதைக் கண்ட சாந்தாவுக்கு அவள் கொண்ட சந்தேகம்

மேலும் மேலும் வளர்ந்துகொண்டே போயிற்று. தன் கணவனுக்குச் சரியான பாடம் கற்பிக்கவேண்டுமென்று எண்ணிய சாந்தா ஒரு தந்திரம் செய்தாள். தானும் மற்றொரு ஆண்மகன்மீது காதல் கொண்டிருப்பதுபோல நடிக்க எண்ணினாள்.

ஓர் நாள் மாலை ரங்கராஜு ஆபீசிலிருந்து வரும் வேளையில் ஒரு கடிதத்தை எழுதிக்கொண்டிருந்தாள். அவள் எழுதிய கடிதம் பின்வருமாறு:—

"என் ஆருயிர் காதலரே! இத்தனை நாளாகத் தங்களுக்குக் கடிதமெழுத எண்ணிய எனக்கு இப்போதுதான் அவகாசம் கிடைத்தது. என் கணவர் இப்போது வீட்டில் இல்லை. அதனால்தான்........" என்று எழுதிக்கொண்டே வருகையில், திடீரென்று பின்புறமிருந்து யாரோ அக் கடிதத்தைப் பிடுங்கியது கண்டு சாந்தா திரும்பிப் பார்த்தாள். ரங்கராஜு நிற்கக்கண்டாள்.

"சபாஷ்! இதற்குத்தானா இத்தனைநாள் இந்த வேஷம் போட்டாய்? பெண்களை நம்புவது கூடாது என்பார்கள்; அந்த உண்மையை நான் இன்றுதான் கண்டுகொண்டேன். உம்!........காதலா, காதலா........கள்ளக் காதல்! சபாஷ். வஞ்சகி உன்னை நான் இன்றுதான் கண்டுபிடித்தேன்" என்று மளமளவென்று ஆவேசங்கொண்டவனைப்போல் பேசினான். சாந்தா கொஞ்சமும் கலங்காமல் நின்றுகொண்டிருந்தாள்.

"உம்! ஏன் ஒன்றும் பேசாமல் நிற்கிறாய்? இதற்கு என்ன பதில் சொல்லப்போகிறாய். கையும் களவுமாக அகப்பட்டுக்கொண்டது யார்? இப்பொழுது சொல்" என்றான்.

"சரி, சரி, போதும் நிறுத்துங்கள். ஆண்களுக்கு மட்டும் குற்றம் செய்ய லைசென்ஸ் கொடுக்கப்பட்டு விட்டதோ! அதைக் கேட்பாரில்லையா? நாங்கள் செய்தால்தான் குற்றமா? நான் மட்டும் உங்களைக் கையுங் களவுமாகப் பிடிக்கவில்லையா? என்று சொல்லிக்

கொண்டே தன்னிடமிருந்தக் கடிதத்தை எடுத்துக் காட்டி "இதோ, தாங்கள் எழுதிய காதல் கடிதம். இதற்கென்ன சொல்லுகிறீர்கள்!" என்று கேட்டாள் சந்தா.

ரங்கராஜு ஆச்சரியமுற்று சாந்தா விட மிருந்த கடிதத்தை வெடுக்கென்று பிடிங்கிப் பார்த்தான். அதைச் சற்று நேரம் பார்த்துவிட்டு கலகலவென்று சிரித்தான்.

இப்படி சிரித்து சிரித்து என்னை ஏமாற்றியது போதும். இதற்குப் பதில் சொல்லுங்கள்.

"போடி! பைத்தியக்காரி, இதை வைத்துக்கொண்டு தானா இவ்வளவு ஆர்ப்பாட்டம் செய்தாய். நான் "தமிழ் மழை" பத்திரிகைக்கு எழுதிய கதையில் வரும் ஒரு பகுதி இது. அக்கதையால் வரும் சங்கரன் தன் காதலி சரோஜாவுக்கு எழுதிய கடிதம். அதை எழுதி முடிப்பதற்குள் நேர மாகி விட்டதால் அன்று ஆபீசுக்குப் போய் விட்டேன். இதைத்தான் தேடித்தேடிப் பார்த்தேன். காணவில்லை. உம்! இது உன் கையில் அகப்பட்டாலும் அகப்பட்டது இதை வைத்துக் கொண்டு என்னை அலக்கழித்துவிட்டாய்" என்றான்.

சாந்தா ஆச்சரியமுற்றவளாய் அசைவற்று நின்றாள். பிறகு சிரித்துக்கொண்டே, "ஒகோ! அப்படியா, நான் ஏமாந்துபோனாலும் பரவாயில்லை. உங்களையும் நான் ஏமாற்றிவிட்டேன்" என்றாள்.

"எப்படி"

"இப்படித்தான், நான் வேண்டுமென்றே நீங்கள் வரும் நேரம் பார்த்து உங்கள் கண்ணில் படும்படி இக்கடிதத்தை எழுதினேன். நீங்களும் அதைக் கண்டு ஏமாந்து போனீர்கள். எப்படியிருந்தாலும் நான் உண்மையைக் கண்டுபிடிப்பதில் வெற்றி பெற்றுவிட்டேன். பார்த்தீர்களா?"

"போதும், போதும், ஏமாந்துபோனதுமில்லாமல் பெருமை பேசிக்கொள்கிறாயோ, என்றான் ரங்கராஜு."

சுஜாதா

★

திருமதி V. N. கௌதமி தேவி

நிர்மலமான வானவீதியிலே, எழும்பித் தன் கடமையை உலேவின்றி உஞற்றும் உத்தம ஊழியனே போல் தன் வழியே நிர்விசாரமாக ஏகிக்கொண்டிருந்தது பால் போன்ற ஒளிகாலும் தண்மதி. விண் மீன்கள் நிறைந்து ஒளிவீசிய அவ்வானம் ஒரு சித்திரப்படாம் விரித்தது போன்று விளங்கிற்று. மந்தமாருதம் மெல்லெலன வீசித் தன்னைத் துய்த்தோர்க்கு இன்பம் பயந்தது. நிலவொளி யில் மூழ்கி முழுப்பொலிவுடன் காட்சியளித்த வெண் சுதை மாடங்கள் நிரம்பிய அவ்வணிகிளர் வீதியானது திருமகளின் இருப்பிடமோவெனக் கருதுமாறு நிறைந்த பொலிவுடன் இலங்கியது.

நிலவொளியுடன் போட்டிப் போடுவது போன்றிருந் தது ஆண்டிருந்த மாளிகைகளுள் ஒன்றினிலிருந்து வீசும் மின்சார ஒளி, ஆம். இயற்கையழகிலும், இனிமை தரும் ஒளியிலும் ஈடு படாது. நவநாகரீக மின்சாரத்தை அனுபவித்தவாறு, அவ்விடுதியின் பலகணியில் கையை ஊன்றி அமர்ந்திருந்த மங்கை, சுஜாதாதான். அனு பவிக்குந்தொறும் இன்பம் பயக்கும் அவ்வியற்கை யன்னை யின் அணைப்பிலிருந்து அவள் கருத்தைக் கவர்ந்திருந்தது புத்த பகவானின் பால் வடியும் வதனம். அவளுக் கெதிரேயிருந்ததொரு பீடத்தின்மேல் அமர்ந்திருந்தார் புத்தக் கடவுள். அவர் முகத்தில் தான் என்ன சாந்தி! களங்கமற்ற அம்முகமலரில் தோன்றிய காந்தியும், சாந்தி யும் அவர் தூய உள்ளத்தின் பிரதிபிம்பம்தானே! கல் லுருவேயெனினும், அக்கண்களில் ஒப்பற்ற ஒரு தனி ஒளி. மறுவற்ற அறிவும், குறைவற்ற அருளும், செறி வுற்ற தெருளும் அவ்வொளியில் தோன்றின. இதழ் களில் தவழ்ந்த அப்புன்னகைகருத் தான் எத்தனை அர்த் தங்கள். அல்லலுறுத்தும் அண்டத்தின் கண் அலக்க

னுற்ற சிந்தையை யடக்கி மேற்கொண்டதன் வெற்றிச் சின்னமன்றோ அது. குண்டலங்களினல் இழுக்கப்பட்ட செவி தோளில் படிவது போன்று வடிக்கப்பெற்றிருந் தது அச்சிலை. அவ்வுருவம் தான் கல்லேயன்றி, உள்ளம் கல்லல்லவென்று தோன்றியது அவளுக்கு. அலை கடல் துரும்பெனவும், அரவின் வாய்த்தேரை யெனவும், அகங் குழைந்து, செய்வதறியாது தவித்த அவள் உள்ளத் திற்கே அத்திருவுருவம் ஆறுதலளித்தது என்றால் அத னுள்ளத்தை மட்டும் எப்படி கல்லாக நினைக்கமுடியும்?

சுஜாதாவின் தந்தை கதிர்வேலன். அவர் அவ்வூரில் ஒரு பெரிய வணிகன். தீவினை விட்டீட்டிய பொருளே அவருக்கு மிக்கிருந்தது. கதிர்வேலர் குலம் விளங்க, குகனேசுவரியிடம் தோன்றினள் சுஜாதா. செல்லக் குழந்தையாதலால் பொன்னே போல் போற்றி வளர்த்த னர் பெற்றோர். மின்னலைப் பழிக்கும் இடையையும் அன்னத்தைப் பழிக்கும் நடையையும் பெற்றிருந்த சுஜாதாவின் மதிமுகத்தில் திகழ்ந்த நீல நிறம் பூத்த விழி களும் இதழும் கருங்குவளையின் அழகைக் கொள்ளை கொண்டு விளங்குபவைபோலத் திகழ்ந்தன.

மன்னுவுலகின் தன்மையை உள்ளவாறுணர்ந்த கதிர் வேலன் தம் கண்ணிருக்கும் பொழுதே தமது ஒரே பெண்ணுக்கு மண விழா நடாத்தி மகிழ விழைந்தார். அச்சமயம் சுஜாதாவுக்கு ஏழாண்டுகளே நிரம்பியிருந்தன. ஆக்கமும், ஊக்கமும் ஒருங்கே கூடித் தந்தையின் ஆவலை நிறைவேற்றுவதற்கு உற்ற துணையாயிருந்தன. அவர் எண்ணமும் ஈடேறிற்று. உள்ளமும் குளிர்ந்தது. தம் பெண்ணின் எதிர்கால வாழ்க்கையை அவர் என்ன கண்டார்?

மணமான மறு ஆண்டே மரணமடைந்தான் சுஜாதா வின் மணாளன். ஆம். பரவியிருந்த வைசூரி பல வுயிர் களைச் சூறையாடியது போல அவனையும் கொள்ளை கொண்டது. வாழ்க்கை யெல்லையைக் குறைக்கவும் கூட்

டவும் நம்மாலியலுமா? கூட்டமென்னும் கண்ணிலியி னிடமிருந்து அவனுயிரை மீட்க யாருக்கேனும் திறனுண்டா?

காலச் சக்கரம் சுழன்றது. ஆண்டெனும் மலரி லிருந்து ஒன்பது இதழ்கள் உதிர்ந்துவிட்டன. இன்று சுஜாதா இளமை குலவும் ஒரு பருவமங்கை. "மண்ணினும் நல்லார்; மலர்மகள், கலைமகள், கலை ஊர் பெண்ணி னும் நல்லள்," எனப் பிறர்போற்ற வனப்புடன் திகழ்ந் தாள் அவ்வனிதை. அவள் மனத்திலே ஒரு அமைதி யின்மை. குலாசாரப்படி அவளும் வைதவ்யம் மேற் கொள்ளுமாறு வற்புறுத்தப்பட்டாள். "மக்கள் இழந்த இடும்பையினும், மனையாளிழந்த இடும்பையினும் மிக்க இடும்பை ஒவாத விதவை இடும்பை யே" யன்றோ! கண வனை யிழந்தார்க்குக் காட்டுவது எது? அணில் வரிக் கொடுங்காய் வாள் போழ்ந்திட்ட, காழ்போனல் விளர் நறு நெய்தீண்டா, தடையிடைக் கிடந்த கைபிழி பிண்டம், வெள்ளைச் சாந்தொடு புளிபெய்தட்ட, வேளை வெந்தை வல்சியாகப், பரற்பெய் பற்றிப் பாயின்று வதியு முயலற் பெண்டி" ரெனச் சொல்லப்படும்பொழுதே அதன் கொடுமை, செவி மடுக்கவும் கூசுகின்றதன்றோ!

கார்மேகத்தை நினைப்பூட்டும் அவளுடைய கார்மேக மனை கரிய கூந்தல் மலரிழந்தது, மணமிழந்தது. பிறை மதி நிகர் நெற்றி திலகமிழந்தது. நகையிழந்த முகமும், புகையிழந்த கூந்தலும் உடையவளானல் சுஜாதா. வற் புறுத்தலுக்கும், உலகவருக்கும் அஞ்சியே, அவள் அவ்வாறிருந்தாளே தவிர, உள்ளத்தில் அவற்றை வெறுக்கவில்லை.

பருவமங்கையல்லவா? தன்னைப்போன்ற பெண்க ளைக் காணுங்கால், தானும் அவர்களைப்போல இருக்க ஆவல்கொண்டதில் வியப்பென்ன? ஆசைக்கு அளவு கிடையாதல்லவா? மனமென்னும் குரங்கு அவளை அலக் கழித்தது. சிந்தையை யடக்க மிகச் சிரமப்பட்டாள்.

தன்னையும் மீறி, கட்டவிழ்க்கப்பட்ட காளைபோல் வலிந்தோடியது அவள் மனம்.

நடுக்கடலில் திசைதப்பிய மரக்கலம்போல் மனம் ஊசலாடிய அந்நிலையிலே அவளுக்கு ஆறுதலளித்தது அவ்வருஞ்சிலையே. "துறவு மடக்கமுந் தூய்மையுந் தவமுமறவினை யோம்பலும், மனையினீங்கிய முனிவர் தமறமே", யென்ற வீரசோழியத்திற்குத் தக்கதொரு சான்றாக விளங்கிவரும், சத்வகுணபோதனும், அடுத்து வந்தவர்க்கு அஞ்சேலென அபயமளித்து ஆதரிக்கும் வள்ளலுமான அருட்பெருங் கடலின் கருணையினால் புனர் ஜென்மம் எடுத்துவிட்டாள் சுஜாதா. உலக வாழ்க்கையில் இச்சைகொண்ட அவளது முற்பிறவி ஒழிந்தது. ஆம். முத்திக்கு வித்தாகிய பரம்பொருளிணையடிகளுக்கே அவள் இதயம் வைத்தாள். "புத்தர் பிரானே நின் சத்வகுண போதம் உலகெலாம் பரவுதல் வேண்டும்," என்று அவள் வாய் முணுமுணுத்தது.

சேரியில் தோன்றிய சிறிய பெண்

திருமதி த. ந. ஆநந்த நாயகி

இளவேனில் காலம்! தென்றல் தவழும் மாலை! காவிரிப் பெண் புனலாடையை உடுத்து அசைந்துப் போகிறாள்! சூரியன் அவளது ஆடையைப் பொன்னுடையாக்கினான்! அவளழகைக் காண இரு பெண்கள் வருகின்றனர். ஒருத்தி நாட்டுக்கு உழைப்பவள். மற்றவள் வீட்டுக்கு உழைப்பவள். முன்னவள் மங்கா. பின்னவள் அம்மு.

மங்கா! உன் வரலாறு அறியும் பேறு எனக்கு வாய்க்காதா.

அம்மு! என் குறை சொல்லிக் குறையுமா! உள்ள தொல்லை விள்ளத் தொலையும் என்பார்கள். கேள்.

"பிறப்பொக்கும் எவ்வுயிர்க்கும்" என்ற மறை தோன்றிய நாட்டிலே என் குறை நீங்க துறையில்லையே! இழிகுலத்தில் பிறந்தேன் இன்னல் உறுகின்றேன். பல் முளைக்கு முன்னே பால் கொடுத்த தாய் மறைந்தாள். தந்தை தனித்து நின்றார். அவர் பார்ப்பானொருவனுக்குப் பண்ணையாளர். சின்னாள் வரையில் சேரியில் வாழ்வு சிறப்பாயிருந்தது. என் கால்வளர அவரைக் காலன் கவர்ந்தான். போற்றுவார் அற்றுப் பொருமினேன். திக்கற்றுத் திகைத்தேன். சேரிப் பெண்ணைச் சேர்ப்பவர் யார்? தீண்டாதவளுக்குத் திக்கு ஏது? ஒதுக்கினவளுக்கு உறவு ஏது? அழுதாலும் ஆற்றுவார் யார்? தொழுதாலும் தூர நில் என்பாரே! பெண்ணென்றால் பேயும் இரங்கும்! ஆனால், தீண்டாத பேயை வேண்டுவார் உண்டோ! படைத்தவனுக்கு அன்றே பாரம்! பண்ணைப் பார்ப்பான் கண்ணைத் திறந்தான். என்னை எடுத்து இன்புடன் வளர்த்தான். அரசமரத்துப் பிசாசி அண்டினவனைப் பிடித்தமாதிரி எனக்குப் பிறப்புடன் வந்த சனியன்

அந்தணருக்குப் பிறந்தபின் வந்தது. சாதி அந்தணருக்குச் சாதிப்பிரஷ்டம் கிடைத்தது. அவர் நேருவைப்போல நெஞ்சுத் துணிவுடையவர். காந்திஜியைப் போல சாந்தம் உடையவர். சாதியை உதறினர். என்னை உதறவில்லை. பள்ளியில் புகுத்தினர். பரிவுடன் வளர்த்தார். பார்ப்பான் வளர்த்தாலும் பார்த்தவர் மதிப்பாரா? உடன் வருவோர் ஒதுங்கி நடந்தனர். பள்ளியில் எவரும் பட்சமாய் பழகவில்லை. மாணவிகள் பேச்சு மனத்தைப் பிளந்தது. நான் கோழையல்ல! தீண்டாமையைத் தொலைக்கத் துணிவு கொண்டேன்.

நாட்கள் ஓடின. மங்கைப் பருவம் அடைந்தேன். வளர்த்தோர் மனத்தில் வருத்தம் வளர்ந்தது. வரனைத் தேடி வாடினர். அந்தோ! பாவம்! எங்குச் சென்றாலும் ஏமாற்றம். எடுத்ததற்கெல்லாம் ஏளனம். இயம்பினதற்கு எல்லாம் இழிவு. என்றாலும் என்மேல் பரிவு மாறவில்லை. மனமும் தளரவில்லை. காங்கிரஸ் நாட்டை மறந்ததா! சிறை வாசத்தால் சித்தம் சிதைந்ததா! அவர்கள் முயற்சியெல்லாம் விழலுக்கு இரைத்த நீராயிற்று. என் வாழ்வு அவர்களுக்குச் சூனியமாய்க் காட்சி அளித்தது. கறந்த பாலைக் கமரில் பெய்தாற்போல கலங்கினர். காதல் மணத்தைக் கடிந்துவாழும் இக்காலத்தில் கலப்பு மணத்திற்கு இடம் ஏது? இல்லறம் புல்லறமாயிற்று. நாட்டை நோக்கினேன். தீண்டாமைக் காலன் கண்ணில் தோன்றினன். காந்தியைக் கருத்தில் வைத்தேன். சேரிச் சேவையே சிறப்பெனக் கொண்டேன். பாலரைச் சேர்த்துப் பள்ளி அமைத்தேன். சேரியைத் திருத்தினேன். கதரை நூற்கக் கற்றுக் கொடுத்தேன். தேசத்துச் செய்தியை தினமும் புகட்டினேன். தேசிய கீதங்கள் திசையைப் பிளந்தன. பாரதி பாட்டு பண்ணொடும் பழகின. தீண்டாமையின் தீமையை உணர்த்தினேன். "எல்லாரும் ஓர் இனம்" என்ற வீர முழக்கத்தைக் கிளப்பினேன். எளியோர் கூக்குரல் இறைவன் காதில் விழுந்தது. மந்திரி மக்கள் அழைக்க வந்தனர். ஒதுக்கிய சகோதரர்களை உடன்

கொண்டுச் சேர்த்தனர். கலந்து நின்றுக் கடவுளை வணங்கினேம். களிப்புக்குப் பின் கவலை வளர்ந்தது. "காளி வரம் கொடுத்தாலும் பூசாரி வரம் கொடான்" என்ற உலக வழக்குப் பொய்க்குமா! சமூக வாழ்வில் சமவுரிமை இல்லை. சுயநலச் சூழ்ச்சி சும்மா இருக்குமா! வருங் காலத்தில் என்ன வருமோ என்று வருந்துகிறேன். அம்மு! இன்னுங்கேள்! இந்து சமயத் தாய்க்கு ஒரு கண்ணில் வெண்ணெயும், மற்றொரு கண்ணில் சுண்ணும்பும் இருக்குமோ! எங்களை விலக்கிவைக்க அவளுக்கு மனம் எப்படி சம்மதித்ததோ! என்னைப்போல எத்தனை பெண்கள் வாழ்க்கைக்கு இத்தீண்டாமை உலை வைக்குமோ! இதென்ன அநியாயம்! அம்மு! நீயே சொல்! நீயும் நானும் இந்த மண்ணில்தானே பிறந்தோம்! நமக்குள்ளே எவ்வளவு வேற்றுமை பார்த்தாயா! போதுமா!

மங்கா! உன் சரித்திரம்! வீர சரித்திரம்! உன் சகிப்பே சகிப்பு. சமூகத்தில் தீண்டாமை எப்படி வந்ததென்று எனக்கே தோன்றவில்லை. நமக்கு நல்ல காலமாக காங்கிரஸ் விளங்குகிறது. அரசு காங்கிரஸின் கைக்கு மாறும் பொழுதெல்லாம் எங்கும் நல்ல மழை பெய்யக் கண்டோம்! அப்படியே இவ்வாண்டும் நடந்தது. இதனுல் என்ன தெரிகிறது? கோயில் நுழைவு ஓர் நல்ல சகுனம். இனி நாம் கோயிலில்கூடி வணங்கலாம். மனையிலும் கலந்து வாழலாம். சுதந்திர இந்தியாவில் நாமெல்லாம் சுற்றத்தாராகி விடுவோம். சுயநலம் சோர்ந்தது. வைதிகம் கால் வாங்கிற்று. இனிக் கோயிலில் கலப்புக் கலியாணம் கடவுள் முன்னே நடக்கும். மாதர் வாழ்க்கை புதுமணம் பெறும். வா! என் வீட்டுக்குப் போகலாம்.

மொழிபெயர்ப்பு :

★ மகிபதி ★

வித்துவான் ஒன். பிறைக்கண்ணியான் B. A.

நாடக உறுப்பினர்

தனகன் (Duncan): ஸ்காத்லந்து அரசன்

மாலகன் (Malcolm)
தனபயன் (Donalbain) } அரச குமாரர்

மகிபதி (Macbeth)
பாங்கன் (Banquo) } அரசன் படைத் தலைவர்

மகாதலவாணன் (Macdonwald): அரசனது பகைவன்

(கதை வளர பிறவுறுப்பினரும் வருவர்)

தோற்றுவாய்

தனகனோடு மாறுபட்டெழுந்த மகாதலவாணனை மகிபதியும் பாங்கனும் சென்றுப் பொருது அழித்தனர். பின் நறவ (Norway) நாட்டரசன் சோர்வு கண்டு புதுப் படையுடன் வந்தனன். அவனையும் வென்று வாகை சூடிய மகிபதியின் போர் நிகழ்ச்சியை அரசன் மகிழ்ந்து கேட்கும் காட்சியோடு இப்பகுதி நிற்கிறது.

களம் I

காட்சி 1: [வெளி நிலம்]

இடியும் மின்னலும் : மூன்று அலகைகள் வருகை

மு. அ.: பொருமிடி மினலோ பொழிமழைப் பொழுதோ
வெருவுரு மூவரும் மீண்டு முறுவதே.

இ. அ.: வெங்களப் பூசல் வீந்தது மாங்கதை
வெற்றியு மற்றும் விளைந்ததும் வருதும்

மூ. அ.: பகலோன் படுமுன் னுகு மதுவே.

மு. அ.: கூடு மிடத்தைக் குறிக்கொள் வோமே.

இ. அ.: புகழ்வளஞ் செல்லா புன்சுர முதுக்காண்.

மூ. அ.: மகிபதி வரவை யெதிர்வோ மாங்கே.

மு. அ.: நரைமெய்ப் பூளை! நல்குக விடையே.

இ. அ.: உருகெழு தேரை யுரைத்தல் கேட்டி.

எல்லாம் கூடி:

அழகே அவமால்; அவமே அழகால்
பழுதுறு காற்றில் பனியில் படர்வோம்.

காட்சி 2: [புரிசைக்கருகில் பாசறை. உள்ளே அழைப்பு (தனகன், மாலகன், தனபயன், இளநாகன், பணியாளருடன் இருத்தல். குருதி அளைந்த உடையுடன் வரும் போர் வீரனொருவனைக் காணல்)].

தனகன்:—

குருதி மலியக் குறுகுவா னெவனோ?
அருமுனை வெஞ்சுரத் தாவயின் விளைவை
வெருவரு காட்சியான் விளம்பலு முறுமே

மாலகன்:—

உண்மையு முறுதியு முடைய மெய்ச் சேவகன்
கண்மையி னெனசிறை நூறிய காதலன்
ஆமிவன். வருக! தறுகண் துணைவ!
புண்ணொடு வெம்முனை புறந்தந்த ஞான்றுநீ
ஞாட்பினுள் பட்டது நாடனுக் குரைமினே.

போர்வீரன்:—

நெடும்புனல் வாங்குகை ஞெகிழ்த்த விருவர்
நடுங்குபு பிணைஇ நலிந்தமை மான
கலிழ நின்றதை களத்தின்கண் ணிகழ்ச்சி
மறம்புக னெஞ்சத்து மகாதல வாணன்
தெறல்வினைக் கமரிய திறலினன்—வாய்ப்பட

வையத் தணங்குசால் வன்கணம் அடர்ந்தன—
மேற்பால் தீவத்து மேவலர் துரத்தலின்
பொறையுறு மெய்ப்புதை யரணம் பொலிய
வலம்படு குழூஉ நிலை யதிர மண்டிய.
அலம்படு செவ்வியு மாடுமகள் கடுப்ப
முறுவலின் கவற்றி முரண்டொழில் ஊக்கின்று.
எனைத்து மிறையும் பயனில. அளியன்!
செறிமுரண் மகிபதி பொறிமா றட்டுப்
பைங்குருதி பனிற்றப் படுபிணம் பெருக்கினன்;
செங்கண் கொற்றவை செல்வனின் செயிர்த்து
வருபடை போழ்ந்து வாய்ப்பட விலங்கியான்
யுருகெழு தோற்றத் தொருதெவ் முற்றி
யொளிறுவா ளுழக்கி யுடல்கிழிய வாங்கினன்.
வடுவாள் வாயொடு உயிர்ச்சிறை பிழைத்தது.
மற்றவன் கருந்தலை மாணெயி லுணங்குமே!

தனகன் :— அச்சோ!

தறுகண் துணைவ! தகைசால் பெரும!

(போ. வீ) :—

வளர்கதிர் ஞாயிறு வடவயின் படர்தரக்
கலங்காய் கடுவளி யுருமொடு சினைஇ
நிலந்தலை மயக்கி நெஞ்சழித் தாஅங்கு
களிதுவன் றுவயின் துனிப்புனல் கலித்தது.
மற்றது துன்பம் மன்னவ கேண்மோ!
ஒடுங்காத் தெவ்வ ரூக்கறக் கடைஇ
முரண்விளி விழுமத்து முளைவளந் தூக்கி
யொளிறுவாள் முகத்த தோடுகைத் தெழுதரூஉ
நறவநாட் டரையன் விருந்தமர் புரிந்தனன்.

தனகன் :—

கடும்படை கடுத்துவரக் கலங்கலர் மன்னே
மகிபதி பாங்கனம் மாண்படைத் தலைவர்?

கண்டேன் மழையை! ★

ஒண்மணி

"மழையுங் காற்றும் பராசக்தி செய்கை காண்" —பாரதியார்.

"**ம**ழையின்றி மாநிலத்தார்க்கில்லை" யென்ற பெரியார் வாக்கு அனைவரும் அறிந்ததே. தமிழுக்கே சிறப்பெழுத்தாகிய "ழ" கரத்தை யிறுதியிலேயுடைய சொற்களுளிதுவு, மொன்று. பிற இமிழ், யாழ் போல்வன. மழை, குளிர், நீர், மேகம் என்று பல பொருள் படுவதோர் இனிய சொல்லாகும். உலகுக்கு மழை மிகமிக இன்றியமையாததாகும். இஃதில்லை யென்றால் பிறிதெதுவும் உளதாகாது. நிலம், நீர், தீ என்ற மூன்றுமே உலகத்துக்கு அவசியமான பொருள்களாகும். இது பற்றியே இவை மூன்றையும் உலகம் தொன்று தொட்டே தெய்வங்களாக வணங்கி வந்தது. ஆகவே மழையை வாழ்த்து தலைக் கடவுள்; முனிவர், பசு, பார்ப்பார், அரசர், மழை, நாடு என்ற வாழ்த்தப்படும் பொருள்கள் ஏழினுள் ஒன்றாக இலக்கண ஆசிரியர்கள் கூறியுள்ளார்களென்பது "வாழ்த்தியல் வகையே" என்ற தொல்காப்பியப் பொருளதிகாரச் செய்யுளியல் 109-ம் சூத்திரவுரையால் தெரியலாகும். நிலமும், நீரும், தீயும் என்னும் மூன்றும் முறையே பிரமன், திருமால், சிவன் என்னும் கடவுளரோடு இயைபுடைமையின் அவற்றை நாகரிக உலகம் வணங்குகின்றது. "போற்றி நின் கருணை வெள்ளப் புதுமதுப்புவனம் நீர்தீக்காற்று, இயமானன் வானமிருசுடர்க் கடவுளானே" (திருவாசகம்) என்ற மறைப் பொருளும் இக்கருத்தினை வலியுறுத்தும். நிலம் ஆக்குகிறது. நீர் வளர்க்கிறது. தீ யழிக்கிறது என்றும் கூறுகிறார்கள். நிலம் நீர் தீ என்ற மூன்றனுள் நடுநின்ற நீருக்கே மூன்று தொழில்களுமுண்டு. நீரே ஆக்கும் அளிக்கும் அழிக்கும் எனவே இந்த நீருக்கும் நீர் மழை மிக அவசியம். நீர் மழை யென்று கூறுவதை நோக்க நேயர்கள் என்னை நகைக்க வேண்டாம். நீர்மழை, நெருப்புமழை, கல்மழை,

பொன் மழை, மண் மழை என்று பல மழைகளுண்டு. ஆகையால் அங்ஙனம் கூற நேர்ந்தது.

நீர் மழை பெரும்பாலோரறிந்ததே. நெருப்பு மழையுமுண்டென்று திருவிளையாடற் புராணத்தாலறிகிறோம். கன்மழை பசு மந்தைகளின்மீது பொழிந்த பொழுது கண்ணபிரான் மலையையெடுத்துத் தடுத்தார் என்பதை "கல்லெடுத்துக் கன்மாரிகாத்தாய்" என்று ஆழ்வாரொருவர் கூறியுள்ளார். இக்காலத்தும் கல் போன்று ஆலங் கட்டிகள் பெய்வதைப் பலர் கண்டிருக்கிறார்கள். காஞ்சிமா நகரின் கண்ணே பொன்மழை (பொன் மாரி)யும் பெய்ததுண்டு. அது பற்றியே,

"காரெலாம் எழுந்து ஏழரை நாழிகைக்
காஞ்சனம் பொழிகாஞ்சி யதன்கண்ணே"

என்று ஜெயங் கொண்டாரும் கூறியுள்ளார். மண்மாரியும் உண்டென்பதும் பெய்துள்ள தென்பதும், "மண் மாரியாலழியவாட்டு" என்ற காளமேகத்தின் செய்யுளால் தெரிகின்றோம்.

இம்மழைகளேயன்றி யின்னும் பல மழைகளுமுண்டு. இங்கு ஒன்று கூற விரும்புகிறேன். மழையெனினும் மாரியெனினும் ஒன்றே- மாரியம்மையென்னும் சொல்லின் கடைக்குறையாகிய மாரியென்ற சொல்லுக்கும் மழையென்று பொருள்கொண்டு மாரி மழை தெய்வம் என வரலாற்று முறைதெரியாதார் கூறுவதுமுண்டு. இந்த மாரிக்கும் அந்த மாரிக்கும் ஒரு தொடர்புமில்லை. தொடர்பு உண்டெனில் கோமாரி என்ற சொல்லுக்குப் பொருள் பிரிதாகும். முடிச்சுமாரி கேப்புமாரி என்று கிராமங்களில் வழங்கப்படுவோர்க்கும் மழையோடு உறவு கொண்டாட நேரிடும். (ரகர றகர ஒலி வேறுபாடு விளங்கக் கேட்கப்படாமை ஈண்டு உணரப்படும்!)

மழையென்ற பொருளில்வரும் மாரியென்ற சொல்லானது பூமாரி, கணைமாரி, சொன்மாரி என்று வருவதும் அறிவோம். அச்சொல் எப்படியாயினும் ஆகட்டும்.

இனி மழை, உலகுக்கு எங்ஙனம் இன்றியமையாததெனக் காணுவோம். மழை யுலகுக்கு அமுதம் போன்றதாகும். அமுதமுண்டவர் சாவாது நிலைபெறுதலின், உலகத்தை நிலைபெறச் செய்யும் மழையையும் அமுதமென்று கூறலாம். மழையில்லையானல் பசியென்றதொரு நீங்காநோய் உலகத்திலே நிலைபெற்று உயிர்களை வருத்தும். மழைவளம் குறையின் ஏர் வளமும் குறையும். மழையொரு துளியேனும் விழவில்லையென்றால் பசும் புல்லும் தலை காண்பரிது. மேகங்கள் நீரை முகந்து மீண்டும் பெய்யவில்லையென்றால் தடங்கடலும் தண்ணீர்மை குன்றும். தேவ பூசனையும் செல்லாது. தானமும், தவமும் நில்லா. மழையின்னோரன்ன சிறப்பு வாய்ந்தது. அதுபற்றியே இக்கருத்துக்கள் அனைத்தையும் உள்ளடக்கி "மழையின்றி மாநிலத்தார்க்கில்லை" என்று கூறியுள்ளார்கள்.

இதுகாறும் பல மழைகளையும், மழையின் இன்றியமையாமையையும் கண்டோம். இப்போது தமிழ் மழை என்ற ஒரு புது மழை பொழியப் போகின்றதென்று விளம்பரம் கண்டேன். இம்மழையால் தமிழ்மொழியும் தமிழ்நாடும் புத்துயிர் பெற்றுத் தழைக்குமோ? என்பது எமது ஐயம். என்னவெனில, இத்தமிழ் மழை தமிழ் மழையாகப் பொழியுமோ, அல்லது வடமொழியும் தென்மொழியும் கலந்த "இக்ஷ்வாகு வம்சத்திலே காக்ஷிதர அவதரித்த சாக்ஷத் புண்டரீகாக்ஷன்" என மணிப் பிரவாள மழையாகப் பொழியுமோ! தற்காலம் தனித் தமிழுக்கு மதிப்பில்லையே. முன்னம் வடமொழியோடு கூடிய தமிழுக்குப் பெருமதிப்பு இருந்ததுபோல் இப்போது A, B, F L, M, O, R கூடிய தமிழுக்குத் தான் மதிப்பு இருக்கிறது என்று கருதி "ஒன்ஸ் அபான்ய

டைம் ஒரு அரசனிருந்தான்'' என்றோ "நையிட் எயிட்டோ கிளாக் போட்டு மெயிலிலே போனேஞ் சார்'' என்றோ ஆங்கிலம் அறு(ரு)ந் தமிழும் சேர்த்துப் பொழியுமோ? அல்லது "என்னுங்கிரே'' "எதுங்கிரே'' "கிட்டாச்சி,'' பூஞச்சி,'' "தோணலே,'' "இன்னக்கி,'' "ஒண்ணும்'' என்று கொச்சைத் தமிழ் மழை பொழியுமோ? என்று பெரிதும் ஐயுற்றிருந்தேன். சென்ற பிப்ரவரி 15-ந் தேதி தமிழ் மழை பொழி பொழிந்தது. கண்டேன் தனித் தமிழை—தூய மழை—அது மட்டுமோ வீரத் தமிழையும் கண்டேன்—பேரானந்தம் கொண்டேன்.

இம்மழையால் தமிழ்நாடு தழைக்கும். மொழி தழைக்கும். சமய[ப் பொது நோக்க]ம் தழைக்கும். தமிழ்க் கலைகளும் தழைக்குமென்பதில் ஐயமில்லை.

எனினும், ஆங்கிலக் கல்வியும் உலக அறிவும் இல்லையென்று குறை சொல்லிக் கைவிடப்பட்ட தனித் தமிழ்ப் புலவர்களை உலக மழை கைவிடாது வளர்ப்பதுபோல் இத்தமிழ் மழையும் அவர்களை என்றும் நீக்காது பொழிய வேண்டுமென்பதே எமது வேண்டுகோள்.

வாழ்க! தமிழ் மழை வாழ்க!!

உவமை ஓவியம்

சகி

ஒரு மொழியின் சிறப்பியல்கள் அதன் நூல்களால் நன்கு விளங்கும். உள்ளக் கருத்தின் நுட்பங்களை எல்லாம் அள்ளிக் காட்டும் நூல்களே எல்லாராலும் கொள்ளத்தகுவனவாகும். அக் கருத்துக்களையும் புறப் பொருள் காட்சியோடு உவமித்துக் கூறினால் பொற் பாவைக்குப் பேச்சு வந்ததுபோல உவந்ததாகும். இன் பச்சுவை மிகுந்த நூலில் இயற்கை மணம் கமழும். இயற்கை மணமும் வாடாமையும் உடைய மலர்கள் யாவை! சங்க நூல் மலர்களேயாகும். அவற்றைப் புதை பொருள் நிறைத்த பொற்பேழைகள் என்றும் சொல்ல லாம். அல்லது மொழிவல்ல ஓவியனொருவன் இயற்கை அழகை வழித்து வண்ணக் கலவையாக்கி, உண்மை யென்னும் கோலால் சுவையென்னும் உயிர் கூட்டி எழுதிய வாழ்க்கை ஓவியங்கள் என்றும் கூறலாம். இத் தகைய நூலிலிருந்து ஒத்த அன்புடைய இருவரது உள்ள நிகழ்ச்சிகளை வடித்து எழுதிக் காட்டும் உவமையை ஆராய்வோம்.

"ஞாயிறு காயும் வெவ்வறை மருங்கில்
கையில் ஊமன் கண்ணில் காக்கும்
வெண்ணெய் உணங்கல் போலப்
பரந்தன்று இந்நோய் நோன்று கொளற்கரிது" (குறுந்)

(இயற்கை வளம் நிறைந்த பொழிலில் இளநங்கை யொருத்தியைக் கண்டு காமுற்றுக் கலங்கிய ஒரு தலைவன் தனது நோயைத் தன் தோழனாகிய பாங்கனுக்குக் கூறுதல்).

எல்லா வகையாலும் வெண்ணெய் சிறந்ததுதான். அதன் இளக்கமே அதற்கு மேம்பாடல்லவா! அதன் மணமும், தூய்மையும், தண்மையும் தனிச் சிறப்பல்லவா! அதன் நிறமும் அதற்கு எவ்வளவு பொருத்தம் பாருங்

கள்! இள ஞாயிற்றின் முன்னே இவை எல்லாம் என்ன வாகும். ஞாயிற்றின் பால் கொடுமையா? வெண்ணெயி னிடத்து இழிவா! இரண்டுக்கும் பகைமையா! ஆராய்ந்து சொல்லுங்கள். வெம்மைக்கு வெப்பம் பகையென்று கொள்ளுவோம். புரையிட்ட பாலைக் கடையும்பொழுது விளையும் வெப்பத்தால்தானே வெண்ணெய் திரளுகிறது! அப்படியானல் நட்பே! நட்பானல் உருக்கி உருவழிக் குமோ! சரி! நட்புமாம் பகையுமாம். இதுதான் சரி! எப்படியென்றல் வள்ளுவர் சாட்சியைக் கேளுங்கள்,

> “இருநோக்கு இவள் உண்கண் உள்ளது ஒருநோக்கு
> நோய்நோக்கு ஒன்று அந்நோய் மருந்து”

இப்பொழுது நங்கையைக் கண்டு நம்பி வருந்தியதற்கு என்ன தீர்ப்புச் சொல்லுகிறீர்கள்! நம்பியின் நோய் நீங்க என்ன உபாயம் செய்வீர்கள்! நம்பி காமுகனு! கலைஞனு! அவன் பொறிகளை அடக்கியவனு! பொறி களுக்கு அடங்கியவனு! இயற்கை வாழ்க்கையில் இயைந்த வனு! செயற்கைப்பாழில் செயலழிந்தவனு! உன்னிப் பாருங்கள்!

பாறையின்மேல் வைத்த வெண்ணெயைச் சொல்லு வானேன்? ஞாயிற்றின் வரவால் பாறை சூடேறும். வெண்ணெய்க்கு ஞாயிற்றாலும் பாறையாலும் சூடுபற்றும். இருதலைக் கொள்ளி எறும்பைப்போன்ற வெண்ணெய் எதை விளக்குகிறது! நங்கையின் பெருவனப்பு இவனது பொறிகளை அலைத்தது. அதனல் மனம் கலங்கிற்று. இஃதொன்று. நங்கையைக் கண்ட அளவிலே புனல் வழிப் போகும் புணையைப்போல முன்னர் நெடுங்காலம் பழகி விட்டது போன்றதோர் பேரன்பு மிகுந்ததால் அவன் மனம் அவள் பின் போயிற்று. இஃது மற்றென்று. ஒளிக்கு வெப்பம் எப்படி வந்தது? எப்பொழுது வந்தது? என் வந்தது? அன்புக்கு வருத்துங் குணம் எப்படி வந்தது? எப்பொழுது வந்தது? என் வந்தது? நேயர் களே சொல்லுங்கள்.

கையில்லாதவனை காவலுக்கு வைப்பார்களா? ஊமனுக்கு உத்தியோகம் கொடுப்பார்களா? வெண்ணெயைக் காக்கும் ஊமன்யார்! அவனுக்குக் கையைக் குறைத்ததேன்? ஊமனுக்குக் கையிருந்தால் தன் அங்கையை குடையாகக் கவிழ்த்து வெண்ணெயை உருகாமல் காப்பான். கையில்லை. பிறரை விளிக்கவும் வாயில்லை. பொருள் விளங்கா ஒலியொன்றே செய்வான். அவ்வொலி கேட்டு வந்தார்க்கும் தன் குறை தீர விளங்கக் கூறும் சொல்லில்லை. பின் என் செய்வான்! வெண்ணெயை நோக்குவான். முன்னிற்பாரையும் நோக்குவான். இவ்வாறு மாறி மாறி நோக்குதலால் முன்னின்றவர் அவனது கண்ணால் அவனது குறிப்பை உணரவல்லவர் ஆவார்கள்! இதற்குள் வெண்ணெயின் நிலையாது?

நம்பி பொறியை அடக்கினாலும் உழுவல் அன்பு விடாது. தனது உள்ள நோய் இன்னதன்மையது என்று அறிவிக்க சொற்கள் பயன்படவில்லை. வாயிருந்தும் மூங்கையே! அன்றோ! அந்நோயை அவன்தானே விளைத்துக் கொண்டவனல்லன். அதனால் அடக்கும் வலியுமில்லை. கையிருந்தும் வலியில்லை! முடவனே அன்றோ!

இதனால் ஞாயிறு தன் கதிரை தண்ணியதாக்கினால் வெண்ணெய்க்கு அழிவு இல்லை. அன்றி முன்னின்று குறிப்புணர்ந்தோர் காலத்தில் வந்து காத்தவராயினும் வெண்ணெய்க்கு அழிவில்லை.

அதுபோல காமுறப் பட்டவள் இரங்கி அருள் செயின் அவன் நோய் நீங்கும். அன்றி அவனது மெய்ப்பாட்டினைக் காலத்தில் கண்டு அவன் உற்ற நோய் வன்மையை நுணுகி யுணர்ந்து பாங்கர் ஆயினர் வாயிலாய் நின்று உதவி செய்யினும் அவனது நோய் நீங்கும். வேறு வழியில்லையென்பதாம். இஃதொருவாறு. இதனால் தமிழ்ப் புலவர்களது மதி நுட்பமும் புலமையுள்ளமும் எத்துணைச் சிறந்ததென்று விளங்குகின்றதன்றோ!

பஞ்சாங்கம் பழுதாயிற்றே!

ச. ந. பாலசுந்தரம் B. A.,

கிறிஸ்து எப்பொழுது பிறந்தார்? இக் கேள்வி பல்லாண்டுகளாக ஆராய்ச்சியாளர் குழுவில் குழப்பம் விளைத்து வந்தது.

கிறிஸ்துவின் அவதார காலம் கி. மு. 28 கி. மு. 8 கி. பி. 24 என்னும் மூன்றினுள் ஒன்றுதல் வேண்டுமென்ற துணிபு நிலவியிருந்தது. கிறிஸ்துவாகமங்களும் இவற்றையே குறிப்பித்து நிற்கின்றன. செரினியஸ் சிரியாவை ஆண்டபொழுது ஸீஸர் அகஸ்டஸின் ஆணையால் ஜனசங்கியை எடுத்த காலத்தில் கிறிஸ்து பிறந்தார் என்று லூக்கு ஞானியின் சுவிசேஷம் கூறும். ஜெருசலத்தை பிரதம ஹெராட் ஆண்டபொழுது கிறிஸ்து ஜனன மானார் என்று மத்தேயு ஞானியின் சுவிசேஷம் கூறும். ஹெராடின் காலம் கி. மு. 37-கி. மு. 4 அகஸ்டஸ் காலத்தில் மும்முறை ஜன சங்கியை எடுக்கப்பட்டது. இக் குறிப்புக்கள் மட்டும் ஆராய்ச்சியாளர்க்குப் பயன் உடையனவாகுமோ!

அதிர்ஷ்டவசமாக டர்க்கி நாட்டில் நடந்த பழம் பொருள் பரிசோதனையால் கி. மு. 8ல் அகஸ்டஸ் ஜன சங்கியை எடுப்பித்த குறிப்பு கிடைத்தது. அதையொட்டிக் கிடைத்த பிற சான்றுகளால், செரினியஸ் சிரியாவையாண்டதும், ஹெராட் ஜெருஸலத்தையாண்டதும், அகஸ்டஸ் கி. மு. 8ல் கணக்கெடுத்ததும் ஒரே காலத்தனவாயின.

இதனல் ஆகமக் குறிப்புக்களும் பழம்பொருள் சோதனையும் பிறசான்றுகளும் கிறிஸ்துவின் அவதாரம் கி. மு. 8ல் என்று வலியுறுத்துகின்றன.

இப்பொழுது கிறிஸ்து சகாப்தப்படி 1947 ஆ! 1955 ஆ! உலகப் பஞ்சாங்கத்தில் இப்பிழை எவ்வாறு சரி செய்யப்படும் என்பதை எதிர்பார்ப்போமாக!

தி நியூ இந்தியா

கமர்ஷியல் சீட் பண்டு லிமிடெட்

21, ஆச்சாரப்பன் தெரு, G. T. சென்னை.

வியாபாரிகளுக்கோர் அரிய சந்தர்ப்பம்

உங்களுடைய ஆதரவால் தினசரி சீட்டுகள், மாதச்சீட்டுகள் மிக வெற்றிகரமாக நடைபெற்று வருகிறது.

கீழ்க்கண்டவாறு புதிய சீட்டுகள் ஆரம்பமாகிறது என்பதை சந்தோஷத்துடன் தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

தினசரி வசூல்	காலம்	நபர்	மொத்த ரூபாய்
ரூ 1-0-0 C	100 நாள்	100	100-0-0
1-4-0 C	200 நாள்	200	250-0-0
2-8-0 C	200 நாள்	50	500-0-0
5-0-0 C	200 நாள்	100	1000-0-0

மாத வசூல்	காலம்	நபர்	மொத்த ரூபாய்
ரூ. 300 B	20 மாதம்	20	6000-0-0
150 B	20 மாதம்	20	3000-0-0
100 A	10 மாதம்	10	1000-0-0

டைரக்டர்கள்,

K. C. S. சிவசாமி நாடார்.
M. P. S. ரத்தினசாமி நாடார்.
P. ராமசாமி நாடார்.
K. C. S. காசி நாடார்.

COVER PAGE PRINTED AT UMA PRINTERS. MADRAS 1.